"பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
ஆங்கொன்றைக் கண்ணி யவர்"



# திருவடித் தாமரை

– சிறப்பாசிரியர்.

( தொடர்– 4 )

ஆன்மாக்களைத் தகுதி அடிப்படையில் மூன்று வகைகளாகப் பகுத்துரைப்பார் அருட்பெருங் கவிஞர் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள். மூவகை ஆன்மா உடையோரை ஒருமலத்தார், இருமலத்தார், மும்மலத்தார் எனத் தமிழ்ப் பெயர்களிட்டு உரைத்தருளினார்.

சகலர் எனப்படும் ஆணவ, கன்ம, மாயைகளாகிய மூன்றுமுடைய மும்மலத்தாரும் திருவடி வழிபாடு செய்து மாயையை ஒழியச் செய்து முன்னேறத்தக்கவர்களேயாவார். இவர்கட்கு அருவ வழிபாடு வாய்ப்பதில்லை. இவர்கட்கு உருவ வழிபாடும் ஒரோவழி அருவுருவ வழிபாடும் சித்திக்கும்.சகலர்க்குத் தியானிக்க எளிதானது உருவமேயாகும்.

பிரளயாகலர் என்போர் ஆணவ கன்மக் கட்டுநிலையுடையோராவர். இவர்களே இருமலத்தார் எனப்படுபவர்கள். இவர்கட்குத் தியானிக்க உரியது இறைவரின் அருவுருவத் திருமேனியாகும். அதாவது சிவலிங்கமாகிய அருவுருவத் திருமேனியைத் தியானித்து உளத்திருத்துதல் இவர்களால் ஆகக்கூடியதே.

ஒருமலம் என்பது ஆணவம், கன்ம, மாயைகளைக் கழித்து மூல மலமாகிய ஆணவம் மட்டும் கொண்டோர் ஒருமலத்தார். இவர்கள் விக்ஞானாகலர் எனப்படுவர். 'விக்ஞானாகலர்' என்னும் சொல்லின் தற்சமத்தமிழ் வடிவமே 'விஞ்ஞானாகலர்' என்பது. ஆணவம் ஆன்மாவோ டொட்டிய அநாதியுமாதலால், 'ஆணவமான படலம் கிழித்து' அருளவல்லவர் பெருமானேயாவார். எனவே இவ் ஒரு மலத்தார் இறைவரின் சொரூபநிலையாகிய அருவத்தை வழிபடவும் தியானிக்கவும் உரியராவர்.

மேலெழுதிய மூவகை ஆன்ம நிலையினரும் தோத்தரிக்க உரிய வகையிலேயே சமயாசாரியர்களின் தோத்திரத் திருப்பனுவல்கள் அனைத்தும் உள்ளன. அருள்பெறவில்லை என்ற பொருட் குறிப்புடன் வரும் திருப்பனுவல்கள் யாவும் சகலராகிய ஆன்மாக்கள் தோத்தரித்துப் படிகால் முறையில் முன்னேற உரியவை. அருள்தா என வேண்டும் பொருட் குறிப்புடன் உள்ள திருப்பனுவல்கள் யாவும் பிரளயாகல ராகிய இருமலத்து ஆன்மாவினர் தோத்தரித்துக் கன்ம மலம் கழித்து முன்னேற உரியவை. மானுட நிலையில் நின்றவண்ணமே அருள்பெற்றேன் என்னும் பொருட் குறிப்புடனுள்ள திருப்பனுவல்கள் விக்ஞானகலரென்னும் ஒருமலத்தார் பாட உரியவை. 'சத்திநிபாதம் தருதற்கு இருவினையும் ஒத்துவரும் காலம் உளவாகி' என அருட் பெருங் கவிஞர் ஸ்ரீ குமரகுருபரர் அருளுவதால் ஒருமலத்தார் ஆன நிலைமையே சாலும். ஆணவ மலத்தை அழிப்பது அவன் செயலே ; நிபாதம் செய்வது திருவருட் சத்தியே. எனவே ஒருமலத்தார் என்னும் தகுதிக்கு வரும் நிலையே அருட்பேறுபெற்ற நிலையாகும்.

சகலருக்குரிய தோத்திரப் பனுவல்களில் வரும் திருவடி, தடத்தநிலைத் திருவடித் தியானம் மற்றும் வழிபாடு குறித்தவை என உணர்தல் வேண்டும். உருவ வழிபாட்டளவிலேயே நிற்போருக்கு உருவத் திருமேனிகளின் திருவடித் தியானமே ஒல்லுவதாகும்.

பிரளயாகலருக்குரிய தோத்திரப் பனுவல்களில் வரும் திருவடி அருவுருவத்தில் திருவடி இன்மையால் திருவடியை மட்டுமே தனித்துக் குறிப்பனவாகும். இவ்வகையில் அத்திருவடி ஓர் உருவத் தோற்றத்தைத் தருவதேனும் அங்கமாகவே அமைவதால் அருவுருவம் எனப்படும். இத்திருவடியே இவர்க்கு வழிபாட்டுக்கும் தியானத்துக்குமாகின்றன.

விஞ்ஞானகலருக்குரிய தோத்திரப் பனுவல்களில் வரும் திருவடி, சொரூபநிலைத் திருவடித் தியானம் மற்றும் வழிபாடு குறித்தவை என உணர்தல் வேண்டும்.

பசுஞானத்தினாலே தன்னை அறிதல் ஆகாது, வானோர் பிரான் வந்து ஆண்டிலனேல் நான் யார் என அறிதல் கைகூடுத லில்லை. ஆகையினால் முத்திறத்தில் எத்திறத்தேம் யாமென அறியாமையால் அனைத்துத் திருமுறைப் பனுவல்களையும் ஓதித் திருவடித் தியானமும் வழிபாடும் மேற்கொள்வதே உய்திக்கான நன்னெறியென ஓர்க.

# வேதங்களை போற்றுவோம்

* ரிஷிகள் தங்கள் காதுகள் மூலம் கேட்டவற்றை வடிவமைத்து மக்களுக்கு கூறியதே வேதங்கள்.

* மந்திர சப்தத்தின் அதிர்வலைகளும் சக்தியும் உங்கள் ஆத்மாவுடன் தொடர்பு கொண்டு உங்களை தெய்வத்துடன் இணைக்கின்றன.

* மந்திரம் என்பது தெய்வத்தின் வார்த்தைகள் மற்றும் குரல் ஆகும்.

* மந்திரங்கள் உங்களுக்காக மட்டும் அல்ல – உலகத்திற் காகவும்தான்.

(ஸ்ரீ சக்தி கீதையில் ஸ்ரீ சக்தி அம்மா)

பாரத நாட்டின் பொக்கிஷங்களில் தலையானது வேதங்கள். எந்தவொரு தனி மனிதனாலும் உருவாக்கப்பட்டது அல்ல வேதங்கள்.

எல்லாம் வல்ல அன்னை ஸ்ரீ பராசக்தியின் சுவாசமே வேதங்கள். பிரபஞ்சத்தில் பரவியுள்ள ஒலிகளில் இருந்து வேதங்களை நம் ரிஷிகள் தம் தவ வலிமையால் கிரகித்து பல்லாயிரம் ஆண்டுகளாக வாய் மொழியாகப் போதித்து வந்தனர். இதனால்தான் வேதத்திற்கு 'எழுதாகிளவி' என்ற பெயரும் உண்டு.

இன்னார்தான் வேதத்தை எழுதினார் என்று குறிப்பிட்ட ஒருவரின் பெயரைக் குறிப்பிட முடியாது.

**மாற்றம் இல்லாத .....**

வேதங்கள் எப்போது தோன்றியது? என்ற காலக் கணக்கையும் கணக்கிட இயலாது. உலகம் தோன்றியது முதலே வேதங்களும் இருந்து வருகின்றன.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளைக் கடந்து இருந்தாலும் வேதங்கள் அதன் தன்மை மாறாமல் உள்ளன. ரிஷிகளால் கிரகிக்கப்பட்டு இந்த

உலகத்திற்கு வழங்கப்பட்டபோது எந்த நிலையில் வேதங்கள் இருந்தனவோ, அதே நிலையில்தான் இப்போதும் வேதங்கள் உள்ளன. இதுதான் வேதத்தின் சிறப்பு.

சில ஆண்டுகளுக்கு முன்பு கூறப்பட்ட வாசகங்களையே இப்போது மாற்றிக் கூறுகின்றார்கள். ஆனால், பல்லாயிரம் ஆண்டுகளாக இருந்துவரும் வேதங்கள் இப்போதும் அப்படியே பொலிவு மாறாமல், இன்று பூத்த மலர் போல புதுமையாக பொலிவுடன் இருக்கின்றன.

கர்நாடக சங்கீத பாடல்கள் உள்ளன. இந்த கீர்த்தனைகளை சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்புதான் சங்கீத மும்மூர்த்திகள் குறிப்பிட்ட ராகத்தில், தாளத்தில் உருவாக்கித் தந்தார்கள்.

ஆனால் சில நூறு ஆண்டுகளிலேயே அந்த ராகங்கள் மாறுதல் அடைந்துவிட்டன. சில இடங்களில் தாளங்களும் மாறிவிட்டன.

தியாகராஜர் இயற்றிய பஞ்சரத்தின கீர்த்தனைகளில் பாடுபவருக்கு கற்பனைக்குச் சிறிதுகூட இடமில்லை.

ஆனால் அவற்றிலும் மாற்றம் ஏற்பட்டுவிட்டது. ஆனால் நம் வேதங்கள் எந்தவொரு மாற்றமும் அடையாமல் அப்படியே உள்ளன.

இசை சார்ந்த பல விஷயங்கள் வேதங்களைப் பாராயணம் செய்வதில் உள்ளன.

வர்ணம் எனப்படும் குறிப்பிட்ட எழுத்துக்கள், ராகத்தில் ஸ்வரம், ஒரு எழுத்தை ஒலிக்கும் கால அளவைக் குறிப்பிடும் மாத்திரை, எழுத்தின் வளமையை உணர்த்தும் சிறப்பு அமைப்பு, நிறுத்தம் இல்லாமல் தொடர்ச்சியாக சொல்லவேண்டிய சந்தானம் ... போன்றவை ஆகும்.

ராகத்தில் கால அளவைக் குறிக்கும் மாத்திரை என்பது என்ன?

மயில், காகம் போன்ற பறவைகள் எழுப்பும் ஒலியின் கால அளவுகள்தான் மாத்திரை என்பது ஆகும்.

வேதம் பாராயணம் செய்வதையும், பறவைகளின் ஒலியையும் ஒரு முறை ஒலி என்ஜினியர்கள் பதிவுசெய்து ஆய்வு செய்தார்கள். அதில்

இந்த இரண்டின் ( வேத பாராயண ஒலி - பறவைகளின் ஒலி ) ஒலி இடைவெளிகள், நானோ நொடிகளுடன் முழுமையாக ஒத்துப்போவது தெரியவந்தது.

ஒரு நானோ நொடி என்பது ஒரு நொடியின் 100 கோடியின் ஒரு பகுதி ஆகும்.

இதன்மூலம் பல்லாயிரம் ஆண்டுகளாக வேத பாராயணம் நாத கம்பீரம் மாறாமல் நிகழ்ந்துவருகிறது என்பது நிரூபணம் ஆகியுள்ளது.

வேதங்களில் சில இடங்களில் ஸ்வரம் பொருளை சார்ந்து உள்ளது.

## மாறியது ஏன்?

த்வஷ்ட்ரன் என்ற ஒரு அசுரன் இந்திர பதவியை அடையவேண்டும் என்பதற்காக ஒரு யாகத்தை நடத்தத் தொடங்கினான். யாகத்தின் பூர்ணாஹுதியின்போது சொல்ல வேண்டிய மந்திரம் ... இந்திரனின் எதிரி வெற்றி அடையட்டும் ... என்ற அர்த்தத்தை தரும் மந்திரம் ஆகும்.

இது 7 அட்சரங்கள் கொண்ட மந்திரம். 7 அட்சரங்களில் முதல் மூன்ற எழுத்துக்கள் தாழ்ந்த தொனியிலும், 5 ஆவது அட்சரத்தை உயர்ந்த தொனியிலும், மற்ற அட்சரங்களைத் தாழ்ந்த தொனியிலும் கூறவேண்டும்.

இந்த அசுரன் சரியாக மந்திரத்தைக் கூறி பூர்ணாஹுதி கொடுத்துவிட்டால் இந்திர பதவியை அடைந்துவிடுவான் என்ற பயந்த தேவர்கள் சரஸ்வதிதேவியை சரணடைந்து மன்றாடினார்கள். தேவர்களின் மனக்குறையைப் போக்க சரஸ்வதிதேவி முடிவு செய்தாள். த்வஷ்ட்ரன் பூர்ணாஹுதி மந்திரத்தைக் கூறும்போது அவனது நாவில் நின்ற சரஸ்வதி அட்சரங்களின் தொனியை மாறும்படி செய்தாள். இதனால் இந்திரனின் எதிரி வெற்றியை இழக்கட்டும் ... என்ற அர்த்தமாக மாறியது. இதனால் அந்த அசுரனான த்வஷ்ட்ரன் யாகத்தின் பலனை இழந்தான். இந்திர பதவியை அடைய முடியாமல் மரணத்தைத் தழுவினான்.

அட்சரங்களின் சிறப்பு மட்டுமல்ல. நமது ரிஷிகள் வழங்கிய மந்திரங்களில், வானவியல் கணக்கும் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கது. இன்றுதான் ஏகப்பட்ட கருவிகளைக் கொண்டு ஆய்வுக்கூடம்

அமைத்து, இந்த கிரகம் இவ்வளவு தூரத்தில் இருக்கிறது, இந்தக் கிரகத்துக்கு இந்த நிறம் என்று கூறுகின்றார்கள். ஆனால், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சனி கிரகத்தின் நிறம் நீலம் என்று நம் ரிஷிகள் கூறிவிட்டார்கள். தங்களது ஞானதிருஷ்டியின்மூலம் இவ்வாறு கூறமுடிந்தது. அனுமான் சாலீஸா என்ற பாராயண ஸ்தோத்திரத்தில் வானவியல் கருத்துக்கள் உள்ளன.

யுக ஸஹஸ்ர யோஜந ப ரபாநூ
லீல்யோ தாஹி மதுர பல ஜாநூ

இந்த இரண்டு வரிகளும் வானவியல் தொடர்பான வரிகள் ஆகும். பானு என்பது சூரியன். மனிதர்களுக்கு ஒரு ஆண்டு என்பது தேவர்களுக்கு ஒரு நாள். அதன்படி கிருத யுகம், த்ரேத யுகம், துவாபர யுகம், கலி யுகம் என்ற 4 யுகங்களின் - அதாவது ஒரு சதுர்யுகம் என்பது தேவர்களுக்கு 12000 தேவ ஆண்டுகள்.

**ஸகஸ்ரம் என்பது ஆயிரம்**

யோஜனை என்பது - ஒரு யோஜனை என்பது 12.08 கிலோ மீட்டர் (8 மைல்) 12000 X 1000 X 12.08 = 15,36,00,000 பூமி கிரகத்திற்கும் சூரியனுக்கும் இடையில் உள்ள தூரம் 15 கோடியே 36 லட்சம் கிலோ மீட்டர் என்று அனுமன் சாலீஸாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையமும் ஆய்வு செய்து பூமிக்கும் சூரியனுக்கும் இடையே உள்ள தூரம் இதுதான் என்ற அனுமன் சாலீஸா கூறிய கணக்கைத் தெரியப்படுத்தியிருக்கிறது. இப்படி உண்மையும், சிறப்பும், வானவியல் கணிதமும் தன்னகத்தே கொண்டதுதான் பாரத நாட்டின் வேதங்கள். அப்படிப்பட்ட வேதங்களைப் போற்றுவோம்! புண்ணிய வாழ்வினைப் பெற்றிடுவோம்!

ஒவ்வொரு மந்திரமும் ஒரு தனிப்பட்ட சக்தியையும், அர்த்தத்தையும் உடையது. அது உங்கள் சரீரத்திலும், ஆன்மாவிலும் பதிந்து நீங்கள் தெய்வத்தை உணர வழிவகுக்கிறது.

மந்திரங்கள் மற்றும் பிரார்த்தனைகளைக் கேட்டறிந்து-கொள்ளும் பாக்கியம் மனிதப்பிறவிக்கு மட்டும்தான் கிடைத்திருக்கிறது.

- நன்றி: ஸ்ரீ சக்தி ஞான தீபம் சூலை 17.

## மாதம் ஒரு நீதி

# நீதிநெறி விளக்கம்

### 55. உட்பகை யோம்பல்

புறப்பகை கோடியின் மிக்குறினு மஞ்சார்
அகப்பகை யொன்றஞ்சிக் காப்ப – அனைத்துலகும்
சொல்லொன்றின் யாப்பார் பரிந்தோம்பிக் காப்பவே
பல்காலுங் காமப் பகை.

1. புறப்பகை – வெளிப் பகைவர், கோடியின் – கோடிக்கு மேலும், மிக்கு – மிகுந்து, உறினும் – பொருந்துவாராயினும், அஞ்சார் – ( அறிவுடையோர் ) அதற்காக அச்சங் கொள்ளார், அகப்பகை – ( ஆனால் ) உட்பகைவன், ஒன்று – ஒருவனே யிருந்தாலும் அவனை, அஞ்சி – ( மிகவும் ) அஞ்சி, காப்ப – ( அவனால் தமக்கேதும் தீங்கு நேரிடாதபடி தம்மைக் ) காத்துக்கொள்வர் ; அனைத்து – எல்லா, உலகும் – உலகங்களையும், சொல் – ( தம்முடைய நிறைமொழிச் ) சொல், ஒன்றின் – ஒன்றினால், யாப்பார் – பிணித்துத் தம் அடிப்படுத்த வல்ல முனிவர்கள், பரிந்து – வருந்தி, ஓம்பிக் காப்ப – (தம்மை அணுகா வண்ணம்) பாதுகாவாநிற்பர், பல்காலும் – பன்முறையும், காமப்பகை – காமமாகிய உட்பகையை.

2. சொல் ஒன்றின் உலகு அனைத்தும் யாப்பார், காமப்பகை பலகாலும் பரிந்தோம்பிக் காப்பவே ; கோடியின் மிக்கு புறப்பகை யுறினும் அஞ்சார், அகப்பகை யொன்று அஞ்சிக் காப்ப.

3. புறப்பகையினும் உட்பகை பன்மடங்கு கேடுடைத்து.

4. ‘‘எட்பக வன்ன சிறுமைத்தே யாயினு
முட்பகை யுள்ளதாங் கேடு’’ – குறள்.

‘‘வாள்போல் பகைவரை யஞ்சற்க வஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு’’ – குறள்.

''உட்பகை அஞ்சித்தற் காக்க உலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும்'' – குறள்.

''இம்மைப் பழியும் மறுமைக்குப் பாவமும்
தம்மைப் பரியார் தமரா யடைந்தாரில்
செம்மைப் பகைகொண்டு சேராதார் தீயரோ
மைம்மைப்பின் நன்று குருடு'' – பழமொழி.

''வெள்ளம் பகையெனினும் வேறிடத்தார் செய்வதென்
கள்ளம் உடைத்தாகிச் சார்ந்த கழிநட்புப்
புள்ளொலிப் பொய்கைப் புனலூர அஃதன்றோ
அள்ளில்லத் துண்ட தனிசு'' – பழமொழி.

5. ''கூட இருந்து குரல்வளை அறுக்கும் கொடியோரையும், உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யும் ஊதாரிகளையும் உடனே களைக. உறவினரென்று உள்ளதை உள்ளவா றுரைப்பது தப்பு. வெளிக்கு உறவுகாட்டி, உட்பகைவராய் இருந்து, நம் நிலைதெரிந்து, வலிமை எளிமை அறிந்து நமக்கே வாள் தீட்டும் வன்னெஞ்சம் உலகிற் பலருளர்''
– இள.

''உலகைச் சாபானுக்கிரகங்களால் தம் வசப்படுத்தலின், 'அனைத்துலகுஞ் சொல்லொன்றின் யாப்பார்' எனவும், தவத்தினர்க்குக் காமம் கூடா வொழுக்க மாதலின் 'பல்காலும் பரிந்தோம்பிக் காப்ப' எனவும், முன்னே யறிந்து தம்மைக் காத்தலின் 'அஞ்சார்' எனவும், அறியவும் தம்மைக் காக்கவும் படாது கீழறுத்தலின், 'அகப்பகை யொன்றஞ்சிக் காப்ப' எனவும் கூறுதலால் உறவினராய்த் தம்மை மறைத்தொழுகும் உட்பகைவரை யரசர் நீக்க வேண்டு மென்பது கருத்து''
– தி.சு.செ.

**புறப்பகை கோடியின் மிக்குறினும் அஞ்சார் :**

**புறப்பகை** – ''புறப்பகையாவது பகையை வெளிப்படக் காட்டிப் புறத்திலிருக்கும் பகைவர்'' – ஏ.எஸ்.ஜெ.

''பகை – பகையுடையர்மேல் நிற்றலின் தொழிலாகுபெயர்''
– இள.

**கோடியின் மிக்குறினும்** – ''கோடி மிகப் பலரென்பதற்குக் காட்டியதோரெண். மிக்கு – இறந்தகால வினையெச்சம் ; மிகு – பகுதி ; உ–வினையெச்சவிகுதி ; முற்றியலுகர மாதலால் பகுதி ஒற்றிரட்டல் விரித்தல் ; உகரக் கேடு சந்தி''

– கோ.இ.

**அஞ்சார்** – ''அஞ்சார் என்பதனையே கருத்தாவாகக் கொண்டு கோடியின் மிக்குப் புறப்பகையுறினும் அஞ்சிலாராய பெரியோரெனப் பொருள் கூறினுமாம்''

– சி.வை.தா.

**அகப்பகை யொன்றஞ்சிக் காப்ப :**

**அகப்பகை** –''பகைமையைப் புறத்திலே காட்டாமல் உள்ளே யிருக்கும் பகைவர். அவர் ஞாதியர், மந்திரிகள் முதலானோர்''

– ஏ.எஸ்.ஜெ.

''அகப்பகை – உறவுபோலக் காட்டி உள்ளாய் நிற்கும் பகை''

– அ.கு.

**பரிந்தோம்பிக் காப்பவே பல்காலுங் காமப் பகை :**

**ஓம்பிக்காப்ப** – ''ஒருபொருட் பன்மொழி அன்றி, விலகிக் காப்ப ரெனினு மமையும்''

– சி.வை.தா.

**பல்காலும்** – ''முற்றுந் துறந்தவராயினும் உயிர்க்குணமாகிய காமம் இடையே தோன்று மாதலால் 'பல்காலும்' என்றார். பல்கால் – பண்புத் தொகை ; விரிந்தால் பன்மையாகிய கால் என விரியும் ; நிலைமொழி பல என்பார் நன்னூலார்''

– ஏ.எஸ்.ஜெ.

''புறப்பகைகளை அடக்கும் ஆண்மை யுடையார்க்கும் உட்பகையாகிய காமத்தை அடக்குதல் அருமை யென்றபடி''

– உ.வே.சா.

இஃது எடுத்துக்காட்டுவமையணி.

Those, who fear not the attack of more than ten million avowed enemies, should beware of a single secret foe ; the Sages, who bind the whole world by a single word, will guard, with unremitting caution, against the enemy, lust.

-H.S.

The Sages, who can sway the whole world with a single word strive to suppress the inflnence of lust. The wise prince therefore will fear not a crore of foes from without, but will guard himself against the more dangerous foes that are within. - C.M.

Those that fear not a crore of outside enemies still fear one secret foe. The sages who bind the whole world with a single word, guard with unremitting caution against in - born lust. - T.B.K.

---

## ஸ்ரீ காசிமடத்தில் கலைமகள் விழா

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தில், கலைமகள் விழாவில், 29.09.2017 வெள்ளிக்கிழமை சரஸ்வதி பூஜையும், 30.09.2017 சனிக்கிழமை விஜயதசமி விழாவும் சிறப்பாக நடைபெற உள்ளது.

விஜயதசமி அன்று "கயிலைமாமுனிவர்" ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் முப்பெருந் தேவியர்க்கு சிறப்பு வழிபாடாற்றி, விழாவின் நிறைவில், திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரியில் 1961 முதல் 1965 வரையிலான காலத்தில் கல்விபயின்ற முதுபெரும் புலவர் தென்காசி திரு **ச. குமார அழகப்பன்** அவர்கட்கு "**சைவத் தமிழ்மணி**" எனும் சிறப்புப் பட்டமும், பொற்கிழியும் வழங்கி அருளுவார்கள்.

# ஸ்ரீ குமரகுருபரரின் பிரபந்தங்கள்

பேராசிரியர் ம.வே. பசுபதி, சென்னை.

## பற்றற்றாரின் தமிழ்ப் பற்று

அருட்பெருங் கவிஞர் குமரகுருபர அடிகளார் 'சிற்றிலக்கிய வேந்தர்' எனத் தமிழறிஞர்களாலும் புலவர்களாலும் தமிழ் ஆர்வலர்களாலும் கொண்டாடப்படுபவராவார். அவர் இயற்றியருளியனவாகத் தற்போது கிடைக்கும் பிரபந்தங்கள் பதினான்கு. குமரகுருபரரின் பாடல்களாக பதினான்கு பிரபந்தங்களிலுமாக உள்ளவை 790. இவற்றில் நாற்பத்தேழு இடங்களில் தமிழின் பல்வேறு சிறப்புகளை அடைமொழிகள் வாயிலாக அறிவித்துத் தமிழ்ப் பற்றூட்டிய தகையாளர் இவர்.

'கலைத் தமிழ்த் தீம்பாலமுதம்' ; 'கொத்துமுத்தமிழ்', 'செழுந்தமிழ்ச் செல்வம்', 'செந்தமிழ்த் தெள்ளமுது', 'சொற்சுவை பழுத்த தொகைத் தமிழ்', 'மதுரமது ஒழுகு பசுந்தமிழ்', 'புத்தமுதம் வழிந்தொழுகும் தீந்தமிழ்' – என்றெல்லாம் தமிழை இவர் உயர்த்திப் பிடித்துப் போற்றியதற்கு இவரின் குருதியில் ஊறிய தமிழ்ப் பற்றே முதற்காரணமாகும். அத்துடன் மற்றொரு காரணமும் உண்டு. வேற்று மொழி தமிழகத்தில் பரவும் காலங்களில் வாழ்ந்த தமிழ்ப் பெருங் கவிஞர்கள், தமிழுணர்ச்சியூட்டும் பாடல்களைப் பாடுவதைத் தம் கடமைகளுள் முதன்மைக் கடமையாகக் கொள்வார்கள். இது வரலாறு சொல்லும் உண்மை.

குமரகுருபரர் வாழ்ந்தருளிய காலத்தில், வடபாரதத்தின் மிகப் பல பகுதிகளிலும், தென் பாரதத்தின் சில பகுதிகளிலும் பிற மொழியாளர்களின் ஆட்சி அதிகாரங்கள் வலிமையாகத் தலை தூக்கிக்கொண்டிருந்தன. எனவே இவர் தமிழுணர்ச்சியை, தமிழை உயர்த்திச் சொல்வதன் மூலம் ஊட்டினார்.

திருஞானசம்பந்த சுவாமிகள் இதே உத்தி முறைப்படி மொழிப் பற்றூட்டியமைக்கும் காலச் சூழலும் ஒரு காரணமாக அமைந்ததை இங்கு ஒப்பிட்டுப்பார்க்கலாம். திருஞானசம்பந்தரும் குமரகுருபரரும் தமிழின் உயர்வைப் பாடித் தமிழ்ப் பற்றை ஊட்டினார்கள். ஆனால் பிறமொழிகளைத் தாழ்த்தித் தடித்த சொல் எதுவொன்றையும் அவர்கள் பயன்படுத்தவில்லை. இந்த நனி நாகரிகம் அருளாளர்கட்கே உரியதாகும்.

## பேசவைத்த பிரபந்தம்

தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீ வைகுண்டத்தில் 24.06.1625 ஆம் நாளில் பகல் 12.45–க்குள் குமரகுருபரர் அவதரித்தார்.

ஐந்தாம் வயது வரை வாய் பேசாதிருந்தார். அவரின் பெற்றோர்களாகிய சண்முகசிகாமணிக் கவிராயரும், சிவகாமசுந்தரி அம்மையாரும் தம் சிறுவரைத் திருச்செந்தூருக்கு அழைத்துச்சென்று, பாடு கிடத்தினர். அதாவது, வேண்டுதல் நிறைவேறும்வரை முருகர் திருமுன்னிலையில் மகனைக்கிடத்தித் தாமும் ஊணுறக்கம் இன்றிக் கோயிலிலேயே இருந்தார்கள். இந்தப் பக்தி வைராக்கியத்தை மெச்சி, முருகப்பெருமான் குமரகுருபரரின் திருநாக்கில் தம் திருக்கை வேலால் 'நம குமாராய'என்ற ஆறெழுத்து மந்திரத்தை எழுதினார்.குமரகுருபரர் பேச்சுத் திறனைக் கவிதையாகவே வெளிப்படுத்தினார்.

இதுகாலம் வரை வாய் பேசாதிருந்த சிறுவர் முருகப்பெருமானின் அருளால் வாய்திறந்து 'பூ மேவு செங்கமலப் புத்தேளும்' எனத் தொடங்கி அப்பெருமானின் பேரில் ஒரு பிரபந்த இலக்கியம் பாடினார். அதுவே 122 கண்ணிகளைக் கொண்ட 'திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா' என்னும் சிற்றிலக்கியம். 'பாக்களுள் வெண்பாப் புலி' என்பார்கள். இலக்கணக் கட்டுப்பாடு அதிகமானது வெண்பா. அதிலும் தலைமையானது நேரிசை வெண்பா. நேரிசை வெண்பாவில் மிகப்பல அடிகளால் செய்யப்பெறுவது கலிவெண்பா. ஐந்து வயதுச் சிறுபிள்ளை கலிவெண்பாப் பிரபந்தம் பாடியது அருளதிசயமல்லவா? இந்நூலின் முதல் 33 கண்ணிகளில் சைவ சித்தாந்த சாத்திரம் முழுமையாகவும் சுருக்கமாகவும் உள்ளது. அதனால் இந்நூலைச் 'சாத்திர சாரம்' என்பார்கள்.

முருகப்பெருமான் ஆறுமுக சிவனாக உதயம் செய்து, சூரரை அழித்த சுடர் வேலனான கந்தபுராணக் கதை 75 ஆம் கண்ணி முதல் சுருக்கமாக உள்ளது. எனவே இந்நூலைக் 'குட்டிக் கந்தபுராணம்' என்பார்கள். இந்நூலின் 111 ஆம் கண்ணி முதல் பக்தர்கள் வேண்டத்தகும் அனைத்தையும் தம் வேண்டுகோளாக வைக்கிறார். அதனால் இது சிறந்த பாராயண நூலாக எண்ணற்ற அடியார்களால் நித்தமும் ஓதப்பெறுகின்றது.

## மாலை பெற்ற மகிமைப் பிரபந்தம்

கவிஞன், தெய்வத்தையோ, மனிதருள் சிறந்தவரையோ பிள்ளையாக – தான் வளர்ப்புத் தாயாக (செவிலித் தாயாக) வரித்துக்கொண்டு பத்துப் பருவங்கள் பாடுவது பிள்ளைத் தமிழ் எனப்படும்.

குமரகுருபரர் மதுரை மீனாட்சியம்பிகையைத் தம் பெண் பிள்ளையாகப் பாவித்துப் பாடிய பிரபந்தம் 'மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்'. சந்தச் செந்தமிழ் நூலாகிய இப் பிள்ளைத் தமிழைப் பாடும்போதும், மனதளவில் குமரகுருபரர் துறவு வேட்கையுடனிருந்தார். மதுரை மன்னன் திருமலை நாயக்கர் ஏற்பாட்டின்படி சொக்கநாதர் கோயில் மண்டபத்தில் இந்நூல் அரங்கேற்றம் செய்யப்பட்டது.

பிள்ளைத் தமிழ் நூலில் முத்தப்பருவம் என்பது ஒன்று. குழந்தையிடம் 'முத்தம் தா' எனக் கெஞ்சிக் கொஞ்சிக் கேட்பதாக முத்தப் பருவப் பாடல்கள் அமையும். ஆண் குழந்தையானால் அப்படிக் கேட்பது எளிது. மீனாட்சி 'ஏழுலகு ஈன்றும் இன்னமும் கன்னியே'. மனதளவில் துறவியாகிய குமரகுருபரர் சாத்திரப்படியாகத் துறவுக்கோலம் பூண்பதற்காகக் குருநாதரைத் தேடிச்சென்றுகொண்டுள்ளார். இவர் அம்பிகையாகிய பெண் குழந்தையிடம் 'முத்தம் தா' எனக் கேட்பதில் நிரடல் உள்ளது.

முத்தப் பருவத்திற்கு முந்தைய பருவமாகிய சப்பாணி (கை கொட்டும் விளையாட்டு ) என்கிற பருவத்தின் நிறைவுப் பாடலில் 'திருஞான சம்பந்தருக்குத் தமிழ்த் திருப்பதிகங்களையும், திருவருளாகிய அமுதத்தையும் முலைப்பாலில் குழைத்து ஊட்டிய செவிலித்தாயே! விநாயகரையும் முருகப்பெருமானையும் வளர்த்தவளே!' என்ற கருத்துகளமைந்த தொடர்களால் அம்பிகையை விளித்தார். இதன் உட்கருத்து, 'அடியேனும் உன் பிள்ளைதானே ; நீ எனக்கும் தாய் தானே. மகனாகிய நான் தாயாகிய உம்மிடம் பிரபந்த இலக்கணப் பிழை நேரக்கூடாது என்பதற்காக 'முத்தம் தா' எனக் கேட்கவேண்டியுள்ளது' என்பதாகும்.

'முத்தம் தருகவே' எனப் பிரபந்த இலக்கண முறைமைக்காகப் பாட வேண்டியதற்கே குமரகுருபரர் தயங்குவதை உணர்ந்த மீனாட்சித்தாய், 'முத்தம்' என்ற சொல்லுக்குச் செந்தமிழில் நவரத்தினங்களில் ஒன்றாகிய 'முத்து' என்ற பொருள் இருப்பதைத் திருவுளத்தில் கருதி, முத்தப் பருவத்தின் முதற் பனுவலாகிய 'காலத்தொடு கற்பனை கடந்த' எனத் தொடங்கும் பாடலைப் பாடிய உடனே அம்பிகை சிறு பெண் பிள்ளையாக வந்து, தன் கழுத்தி லிருந்த முத்து மாலையைக் குமரகுருபரருக்குச் சூட்டிப் பெருமைப் படுத்தினாள். வருகைப் பருவத்தில் வரும் 'தொடுக்கும் கடவுள் பழம் பாடல்' எனத் தொடங்கும் பாடல் பாடிய பிற்பாடு அம்பிகை குமரகுருபரருக்கு முத்து மாலை அணிவித்தாள் என்பதும் உண்டு. அம்பிகை சூட்டிய முத்துமாலையில் எத்தனை முத்துகள் இருந்தனவோ நாமறியோம். குமரகுருபரர் அருளிய இந்நூலில் 101 முத்துத் தமிழ் இரத்தினங்கள் உள்ளன.

**காந்தியடிகளைக் கவர்ந்த பிரபந்தம்**

1813 ஆம் ஆண்டு எச்.ஸ்டோக்ஸ் என்ற ஆங்கிலேயர் குமரகுருபரர் அருளிய நீதிநெறி விளக்கத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார். அதன் மறு பதிப்பு 1830 ஆம் ஆண்டில் வெளிவந்தது. 1864, 1868, 1830 ஆண்டுகளில் ஜே. வால்கர் என்ற ஆங்கிலேயர் நீதிநெறி விளக்கத்திற்குத் தாம் எழுதிய ஆங்கில மொழிபெயர்ப்பை மூன்று முறை பதிப்பித்தார். இந்த மொழிபெயர்ப்புப் பதிப்புகளில் ஒன்றைக் கற்ற காந்தியடிகள் நீதிநெறி விளக்கத்தால் ஈர்க்கப்பட்டார். அவர், தாம்

தென்னாப்பிரிக்காவில் இருந்தபோது இந்நூலின் கருத்துகளைப் பலருக்கும் போதித்தார்.

'நம்மவர்களே! இளமை, நீர்க்குமிழி போன்றது ; செல்வம், நீரலை போன்றது ; உடல், நீரில் எழுதும் எழுத்துப் போன்றது. இவை மூன்றும் தோன்றிய உடன் அழிபவை. இந்த உண்மையை உணர்ந்து அழியாதவராகிய கடவுளைப் பற்றிக்கொள்ளுங்கள் ; வாழ்த்துங்கள்' என்ற கருத்தமைந்த நீதிநெறி விளக்க முதற் பாடல் 'நீரிற்குமிழி இளமை' எனத் தொடங்கும் வெண்பாவாகும். அவ்வெண்பாப் பாடலைத் தமிழ் எழுத்துகளில் தாமே எழுதிப் பார்க்க வேண்டும் என்று காந்தியடிகள் ஆசைப்பட்டார். அதற்கான பயிற்சிகள் செய்தார். அவர் தென்னாப்பிரிக்காவிலிருந்து மீளும்போது நண்பர்கள் சிலருக்கு அப்பாடல் முழுவதையும் தாமே தமிழெழுத்துகளில் பிழையின்றி எழுதி, கீழே 'மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி' எனத் தமிழிலேயே கையொப்பமிட்டு வழங்கினார். காந்தியடிகள் 'தம்மின் மெலியாரை நோக்கி' எனத் தொடங்கும் நீதிநெறி விளக்கப் பாடலையும் சிலருக்குத் தமிழில் எழுதித் தந்தார் என்பர். அப்பாடல் 'தன்னைக் காட்டிலும் ஏழையைப் பார்த்து, தன் செல்வம் பெரிது என்று மகிழ வேண்டும் ; தன்னைக் காட்டிலும் அறிவாளியைப் பார்த்து இவரின் கல்வியறிவை நோக்க இவருக்கு முன் நாம் எம்மாத்திரம் எனக் கருதி மேன் மேலும் கற்க வேண்டும்' என்னும் கருத்துடைய பாடலாகும்.

தமிழ் மறையாம் திருக்குறளைச் சுருக்கமாக வழங்குங்கள் எனத் தெலுங்கு மன்னனாகிய திருமலை நாயக்கன் கேட்டுக்கொண்டபடி, திருக்குறளின் அறத்துப்பால் பொருட்பால் ஆகிய இருபால்களின் சாரமாக இந்நூல் இயற்றப்பட்டதால் இந்நூலைக் 'குறள் நெறிச் சாரம்' எனவும் கூறுவர். மதுரையை ஆண்ட அத் தெலுங்கு மன்னனுக்கு இந்நூல் பயன்பட்டதைக்காட்டிலும், குஜராத் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட பாரததேசப் பிதாவுக்கு இந்நூல் பெரிதும் பயன்பட்டது ; விருப்பத்திற்குரியதாக விளங்கியது.

## கேட்டுப்பெற்ற பாட்டுப் பிரபந்தம்

தருமையாதீனம் நான்காவது குருமூர்த்தியாக விளங்கியவர் ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் ஆவார். அவர்பால் அணுகி ஸ்ரீ குமரகுருபரர் தம் துறவு வேட்கையை விண்ணப்பித்துக்கொண்டார். தேசிகரவர்கள் குமர குருபரரைத் தலயாத்திரையாகச் சிதம்பரத்திற்குச் சென்று அங்கு ஒரு மண்டலம் (48 நாட்கள்) தல வாசம் செய்து மீண்டுவருமாறு பணித்தார். குமரகுருபரர் தலயாத்திரை செய்யும்போது வழியிடையிலுள்ள புள்ளிருக்கு வேளூர் எனப்படும் வைத்தீஸ்வரன் திருக்கோயிலுக்குச் சென்றார். அங்கு மிக விரைவாகத் தரிசனம் செய்துகொண்டு, சிதம்பரத்தை நோக்கிப் பயணப்பட்டார்.

'குறத்திப் பெண்ணுக்குச் சலாம் இடும் ஆசையால் தாழும் குமாரனாகிய முத்துக்குமரனைப் போற்றுதும்' என்ற பொருளமைய மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் குமரகுருபரர் ஒரு பாடற் பகுதியைப் பாடி யிருந்தார். 'போற்றுதும்' என்ற சொல்லுக்குத் 'துதித்து வணங்குவோம்' என்பது பொருள். போற்றுதும் – தன்மைப் பன்மை. அதனால் 'எளியேன் உட்பட எல்லாரும் வணங்க வேண்டும் ; துதிக்க வேண்டும்' என்ற பொருள் வரும். போற்றுதும் என்பது நிகழ்கால வினைமுற்றுமாகிறது. சங்கத் தமிழின் தலைமைப் புலவராகிய முத்துக்குமார சுவாமி 'போற்றுதும்' என்பதனை எதிர்கால வினை முற்றாகக் கொண்டார். பெருமான் கொண்ட பொருளின்படி, 'வேளூரில் முத்துக் குமாரசுவாமி என்கிற திருநாமத்துடன் விளங்கும் கடவுளைத் தரிசிக்கும்போது கவிதையால் துதிக்கப்போகிறேன்' என்ற நுண்கருத்துப் பெறப்படும்.

வேளூரில் முத்துக்குமரப் பெருமானைத் தரிசிக்கும்போது துறவு வேட்கையும் குருநாதரின் உத்தரவால் உதித்த வேகமும் உந்தியதால் முருகப்பெருமானின் பேரில் ஒரு பாட்டுக்கூடப் பாடாமல் குமரகுருபரர் விரைந்து தல யாத்திரையைத் தொடர்ந்தார். குமரகுருபரர் வைத்தீஸ்வரன் கோயில் எல்லையைத் தாண்டும்போது முத்துக்குமரப் பெருமான் 'எம்மைப் பாட மறந்தனையோ' எனக் குரல் கொடுத்தார். அத்துடன் 'பொன் பூத்த குடுமி' என அடியெடுத்துக் கொடுத்தார். குமரகுருபரர் புளகாங்கிதம் அடைந்தார். கோயிலுக்கு மீண்டார். அற்புதச் சந்தச் செந்தமிழால் 101 பாடல்கள் கொண்ட பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தம் பாடினார். வைத்தீஸ்வரன் கோயில் முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ் என்னும் பெயரில் விளங்கும் அப்பிள்ளைத் தமிழ் ஆண்பாற் பிள்ளைத் தமிழாகும். பிற்காலங்களில் பிள்ளைத் தமிழ் நூல்கள் செய்த கவிஞர்கட்கெல்லாம் குமரகுருபரர் அருளிய இரு பிள்ளைத் தமிழ் நூல்களே முன்னுதாரணங்களாகவும் இலக்கணமாகவும் அமைந்தன.

## பாட்டு வகைப் பிரபந்தம்

தமிழில் 84 பாட்டு வகைகள் உள்ளன. உதாரணமாகப் பார்த்தால், குறள் வெண்பா வகையில் ஒரு விகற்பக் குறள், இரு விகற்பக் குறள், மரூஉச் செந்தொடைக் குறள் என மூன்று வகைகள் உள்ளன. இவ்வாறு நால்வகைப் பாக்களையும் பாவினங்களையும் எண்ணிக்கை செய்யும் 84 வகைகள் முக்கியமானவை. யாப்பருங்கலக் காரிகை முதலிய செய்யுள் இலக்கண நூல்களைக் கற்றால் கவிபாடும் திறன் வரும் என உறுதியாகச் சொல்ல முடியாது. பிறர் எழுதும் கவிதைகளில் குற்றம் காணும் திறமை வரலாம். முருகப் பெருமானின் அருளால் கவிபாடும் திறன் பெற்று, அம்பிகை திருக்கரங்களால் முத்து மாலையைக் கவியாற்றலுக்குப் பரிசாகப் பெற்ற அருட்பெருங் கவிஞருக்கு எல்லாவகைப் பாடல்களையும் பாட முடியும் என்பதை எழுதித் தெரிந்துகொள்ள வேண்டுவதில்லை.

குமரகுருபரர் சிதம்பரத்தில் தலவாசம் செய்யும்போது தமிழின் பாடல்வகை எண்பத்து நான்கிற்கும் வகைக்கொரு சான்றுப் பாடலாக 84 பாடல்கள் பாடி ஒவ்வொரு பாட்டுக்குக் கீழேயும் இலக்கணக் குறிப்பையும் தாமே எழுதித் தமிழ் வளர்ச்சிக்குப் பேருதவி செய்தருளினார். எண்பத்து நான்கு செய்யுட்களும் தில்லை ஸ்ரீமந் நடராசப் பெருமான் பேரிலேயே பாடப்பெற்ற துதிகள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அவ்வரிய செந்தமிழ் இலக்கிய இலக்கண நூலின் பெயர் 'சிதம்பரச் செய்யுட்கோவை' என்பதாகும். சைவம், தில்லைத்திருக்கோயிலையே 'கோயில்' என்ற பொதுச் சொல்லால் குறிப்பிடும். அக்கோயில் மட்டுமே அனைத்துவகைத் தமிழ்ப் பாடல்களும் பெற்ற திருக்கோயில் என்ற தனிப்பெருமை ஸ்ரீ குமரகுருபரரால் ஏற்பட்டது.

## குருத்துவ மகத்துவப் பிரபந்தம்

'குருவே சிவம் எனக் கூறினன் நந்தி' என்று அறிவித்தார் திருமூலர். ஒரு வார்த்தை – திருவார்த்தை – குரு வார்த்தை – அதற்கு ஒப்பான மறுவார்த்தை இல்லை. குரு தத்துவத்தின் மாண்பை உணர்த்த ஸ்ரீ குமரகுருபரர் தம் குருநாதரைத் துதித்துப் பாடிய பிரபந்தம், 'பண்டார மும்மணிக் கோவை' என்பதாகும். பண்டாரம் = பொருள் சேமிக்கும் கிடங்கு. ஞானம் சேகரித்த துறவரசர்களைப் பண்டாரம் என்பது சமய மரபு. பண்டார சந்நிதி என்பதற்கு 'ஞானக் கிடங்காக விளங்கும் குருநாதரின் திருமுன்னிலை' என்பது பொருள். இதற்கு மேலும் பல விளக்கங்கள் உள்ளன. 'குருநாதரே! எளியேன் பிறவா நெறி பெற அருள்செய்க. மீண்டும் பிறக்க வேணடும் என்னும் விதி இருந்தால், தேவ பதவிகள் எதுவும் எனக்குத் தேவையில்லை ; உம் அடியார்கள் திருவமுது அருந்தித் தெருவோரம் வீசி எறியும் எச்சில் இலையை நக்கும் நாயாகப் பிறப்பித்தருள்க. அப்பிறப்புக்கூட எனக்கு இன்னருள் பயக்கும்' என்பன போன்ற கருத்துகள் அமைந்த குருபக்தி உருக்கம் செறிந்த பாடல்கள் இந்நூலில் உள்ளன. குருவழிபாடே நம் சமயத்தின் முதன்மை வழிபாடு. சங்கம வழிபாட்டிலும் குரு வழிபாடு ஓர் அங்கம் வகிப்பதாகும். மிகு மேன்மை கொண்ட குரு வழிபாட்டிற்கு இவ்விலக்கியமே நல்லுதாரண நூலாகும்.

## கல்வி தரும் பிரபந்தம்

வடபாரதத்தில் உள்ள காசித் தலத்திற்கு ஸ்ரீ குமரகுருபரர் புறப்பட்டார். காசியில் ஒரு சைவ மடத்தை நிறுவி அங்கும் சைவமும் தமிழும் தழைக்குமாறு செய்ய வேண்டும் என்பது இப்பயணத்தின் நோக்கமாகும். அக்காலத்தில் பாரதப் பேரரசின் பல பகுதிகள் வேற்றுச் சமய மன்னர்களால் ஆளப்பட்ட நிலை இருந்தது. தமிழ் வழங்காத பகுதியில், வேற்றுச் சமயத்தவரின் ஆளுகைக் காலத்தில் தம் நோக்கம் நிறைவேறுமா என்று அடிகளார் கவலைப்படவில்லை. அலகாபாத் வரையில் நடந்தே சென்றார். திரிவேணி சங்கமத்தில் புனித நீராடினார். கலைமகளைத் தியானித்துப் பத்துப் பாடல்கள் பாடினார். பத்துப்

பாடல்கள் கொண்ட பிரபந்தத்திற்குப் ‘பதிகப் பிரபந்தம்’ என்பது பெயர். அலகாபாத்தில் குமரகுருபரர் கலைவாணியைத் துதித்துப் பாடிய ஒவ்வொரு பாட்டின் முடிவிலும் ‘சகலகலாவல்லியே!’ என்ற விளி இருக்கும். எனவே, இது ‘சகலகலாவல்லி மாலை’ எனப் பெயர்பெற்றது.

சகலகலாவல்லியே! என் மனமும் வெள்ளைத் தாமரைதாம் இங்கே நீ எழுந்தருளக்கூடாதா? பொருட் சுவை, சொற்சுவை தோய்ந்த ஆசுகவி, மதுரகவி, சித்ரகவி, வித்தார கவிகளைப் பாடும் பணியை நான் செய்வதற்கு உத்தரவிடு! உன் அருட் கடலில் நான் மூழ்க வேண்டும். கவித்துவம் பொதிந்த கல்வியறிவும், வாக்குப் பலிதமும் எனக்குக் கைவர வேண்டும் ; இசை, நாட்டியம் உள்ளிட்ட எல்லா கலைகளையும் எளிமையாக நான் கற்றறிய வேண்டும் என்றெல்லாம், கல்வியறிவு தொடர்பான அனைத்து வேண்டுதல்களும் சகலகலாவல்லி மாலை பனுவல்களில் உள்ளன. இந்நூலைத் தினந் தோறும் பாராயணம் செய்யும் அனைத்துத் துறை இருபால் மாணாக்கர்களும் தத்தம் துறைகளில் சாதனை படைக்கும் வல்லுநர்களாக உயர்ச்சி பெறுவார்கள் என்பது வரலாறு கூறும் உண்மை.

குமரகுருபரர் சகலகலாவல்லி மாலையைப் பாடியவுடன் இந்துஸ்தானி மொழியறிவு பெற்றார். இவ்வாறு பெறும் அறிவாற்றலை ‘ஓதாதுணர் ஞானம்’ என்பர். மேலும் அம்பிகை அருளால் அங்கு ஓர் ஆண் சிங்கம் வந்தது. குமரகுருபரர் அதன்மீது ஏறி அமர்ந்தார். சிங்கம் காசிக்குச் சென்றது. அதுபோது காசியை ஆண்ட மன்னன் பாதுஷாவின் அரசவைக்குள்ளேயே சென்றது. அம் மன்னன் எல்லாச் சமய உண்மைகளை அவ்வச் சமய மேதைகளிடம் கேட்டறியும் ஆவல் மிக்கவன். ஆயினும் குமரகுருபரர் சிங்கத்தின் மீதமர்ந்து வந்ததினால் அஞ்சினான். அவனின் அவையோரும் அஞ்சி ஓடினர்.

மன்னனின் வேண்டுகோளின்படி அடிகளார் சிங்கத்தை உரிய இடத்திற்கு அனுப்பிவைத்தார். பின்னர்த் தம் விருப்பத்தை மன்னனிடம் தெரிவித்தார். மத குருமார்கள் குமரகுருபரரின் அருளாற்றலை நம்பாத நிலையில் பலகட்டச் சோதனைகள் வைத்தனர். குமரகுருபரர் அனைத்துச் சோதனைகளிலும் வென்றார். மன்னனும் இவரின் பணிகளுக்கு உதவ முன்வந்தான். ஸ்ரீ குமரகுருபரர் காசியில் குமாரசுவாமி மடம் நிறுவினார். புதையுண்டிருந்த கேதாரீசுவரர் கோயிலை மீட்டெடுத்துப் புனரமைத்துச் சிவாகம விதிப்படி குடமுழுக்குச் செய்தார். காசியில் தாம் நிறுவிய குமார சுவாமி மடத்திலிருந்தபடி தமிழ்ச் சாத்திர தோத்திர இலக்கியங்கள் பற்றி இந்துஸ்தானி மொழியில் தொடர்ந்து சொற்பொழிவுகள் நிகழ்த்தித் தமிழையும் சைவத்தையும் பரப்பினார். அன்னதானம் உள்ளிட்ட பல்வேறு அறப்பணிகளையும் செய்தருளினார்.

## பிற பல – பிரபல – பிரபந்தங்கள்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள், மூன்று கலம்பக இலக்கியங்களை அருளினார். தாம் அவதரித்த ஸ்ரீவைகுண்டத்தில் எழுந்தருளியுள்ள அருள்மிகு கயிலாயநாதர் பேரில் பாடிய 'கயிலைக் கலம்பகம்' தற்போது கிடைக்கவில்லை. மதுரைச் சொக்கநாதப் பெருமான்பேரில் பாடிய 'மதுரைக் கலம்பகம்' கலம்பக இலக்கியங்கள் யாவற்றுக்கும் தலைமை இலக்கியமாக விளங்குகிறது. குமரகுருபரர் தம் வாழ்நாளின் நிறைவாகப் பாடியது 'காசிக் கலம்பகம்' ஆகும். காசிக் கலம்பகத்தின் நிறைவில், 'புலவர்களே! பரஞ்சுடராகிய பெருமானை நாத்தழும்பேற ஏத்துங்கள்' என்று அறிவுறுத்தினார். இவ்வறிவுறுத்தலுக்கும் உட்பொருளுண்டு. 'புலவர்கள் நாத்தழும்பேறப் பாடும் பாடல்களைப் பக்தர் நாத்தழும்பேற ஓதி உய்திபெற வேண்டும்' என்பதே அதன் உட்கருத்தாகும்.

'திருவாரூர் நான்மணி மாலை' என்னும் பிரபந்தம், தாம் துறவு நெறியில் துலங்குவதற்காகச் சற்குருநாதரைத் தேடிச் சென்ற யாத்திரையின் இடையில், ஆரூர்த் தியாகேசப் பெருமான்பேரில் பாடியது. இந்நூலைப் பாடியதன் பயனாகவே இவருக்கு ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் குருவாக வாய்த்தார் எனலாம். 'மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணி மாலை', 'மதுரை மீனாட்சியம்மை குறம்' ஆகிய இரு பிரபந்தங்கள் உட்பட மதுரைத் தலத்திற்கு ஸ்ரீ குமரகுருபரர் வழங்கிய கவிக்கொடைகள் ஐந்து. 'சிதம்பர மும்மணிக் கோவை' என்னும் பிரபந்தம், இல்லறம், துறவறம் ஆகியவற்றின் இலக்கணங்களும், சைவத்தின் அரிய நுணுக்கங்களும் யாவரும் அறிய அறிவிக்கும் அருமைப்பாடுடையதாகும். இத்துடன் 'தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை'யையும் சேர்த்து எண்ணினால் தில்லைத் திருத்தலத்திற்கு ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் வழங்கியருளிய கவிக்கொடைகள் மூன்று.

ஸ்ரீ குமரகுருபரர் பிரபந்தங்களை நுணுகிக் கற்பவர் மிகுபெரும் தமிழ்ப் புலமையும், சைவ சமயத் தெளிவும், இறையருளும் பெற்றுச் செம்மாந்திருப்பர் என்பது திண்ணம்.

உலகு குளிர எமது மதியின் ஒழுகும் அமுத கிரணமே!
உருகும் அடியர் இதயம் நெகிழ உணர்வில் எழுநல் உதயமே!
கலையும் நிறையும் அறிவும் முதிர முதிரும் மதுர நறவமே!
கழுவு துகளர் முழுக நெடிய கருணை பெருகு சலதியே!
அலகில் புவனம் முடியும் வெளியில் அளியும் ஒளியின் நிலையமே!
அறிவுள் அறிவை அறியுமவரும் அறிய அரிய பிரமமே!
மலையின் மகள்கண் மணியை அனைய மதலை வருக வருகவே!
வளமை தழுவு பருதி புரியின் மருவு குமரன் வருகவே!

– ஸ்ரீ குமரகுருபரர்.

# சுந்தரர் பாடிய திருப்பதிகங்களும் இயற்கை வளச் சிறப்புகளும்

முனைவர் ப. பாஸ்கரன்,
முன்னாள் முதல்வர், ஸ்ரீ கா.சு.சு. கலைக் கல்லூரி, திருப்பனந்தாள்.

சைவ சமய குரவர்கள் நால்வரில் சுந்தரர் மட்டுமே பாடிய தேவார திருப்பதிகங்கள் இருபத்து ஐந்து ஆகும். அவற்றுள் எதிர்கொள்பாடி ; ஓணகாந்தன் தளி ; திருக்கச்சி அநேகதங்காபதம் ; திருநாவலூர் ; திருமண்ணிப் படிக்கரை ; திருவெண்ணெய் நல்லூர் ; திருவெண்பாக்கம் ஆகிய ஏழு திருப்பதிகங்கள் நீங்கலாக பதினெட்டில் இயற்கை வளச் சிறப்புகள் நிறைந்து காணப்படுகின்றன. இங்கு அவர் பாடிய பதிகங்களின் சிறப்பும், மற்றும் இயற்கை வளச் சிறப்புகளும் எடுத்தியம்பப்படுகின்றன.

**1. திருஅஞ்சைக்களம்**

இது மலைநாட்டுத் திருப்பதியாகும். ஸ்ரீ வாஞ்சிகுளம் என்றும் அழைக்கப் பெறும். சென்னை – கொச்சி இருப்புப் பாதையில் ‘இருஞாலக்குடா’ நிலையத்திலிருந்து 8 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. மலைநாட்டில் அமைந்துள்ள ஒரே திருமுறைத் தலம். பரசுராமர் தாயைக் கொன்ற பாவம் நீங்க வழிபட்ட திருப்பதி. சுந்தரமூர்த்தி நாயனார் இப்பதியிலிருந்து வெள்ளை யானையின் மீதேறி கயிலாயம் சென்றார் எனப் பெரியபுராணம் குறிப்பிடும்.

இப்பதியுறை இறைவன் – மகாதேவர். இறைவி – உமையம்மை. இப்பதியின் இயற்கை அமைப்பையும், வளத்தையும் சுந்தரர் தம் திருமுறையில்,

“மலைக்குந்நிக ரொப்பன வன்றிரைகள் வலித்தெற்றி முழங்கி
வலம்புரிகொண்
டலைக்குங்கட லங்கரை மேல்மகோதை அணியார்பொழில்
அஞ்சைக்களம்” (1 : 3-4)

“மடித்தோட்டத்து வன்றிரை யெற்றிட வளர்சங்கம் அங்
காந்துமுத்தஞ்சொரிய
அடித்தார்கட லங்கரை மேல்மகோதை அணியார்பொழில்
அஞ்சைக் களம்” (2 : 3-4)

“கட லங்கரை மேல்மகோதை அணியார்பொழில்
அஞ்சைக் களம்” (3 : 2)

"மழைக்குந்நிக ரொப்பன வன்றிரைகள் வலித்தெற்றி முழுங்கி
வலம்புரிகொண்டழைக்குங்கட லங்கரை மேல்மகோதை
அணியார்பொழில் அஞ்சைக்களம்" (4 : 3-4)

"பாடும் புல வர்க்கரு ளும்பொருளென் நெதியம்பல செய்த
கலச்செலவில்
ஆடுங்கட லங்கரை மேல்மகோதை அணியார்பொழில்
அஞ்சைக்களம்" (5 : 3-4)

"உரவத்தொடு சங்கமொ டிப்பிமுத்தங் கொணர்ந்தெற்றி முழங்கி
வலம்புரிகொண்டரவக்கட லங்கரை மேல்மகோதை
அணியார்பொழில் அஞ்சைக்களம்" (6 : 3-4)

"நோக்குந் நெதி யம்பல எத்தனையும் கலத்திற்புகப் பெய்துகொண்
டேறநுந்தி ஆர்க்குங்கட லங்கரை மேல்மகோதை
அணியார் பொழில் அஞ்சைக் களம்" (7 : 3-4)

"கட லங்கரை மேல்மகோதை அணியார் பொழில்
அஞ்சைக் களம்" (8 : 4)

"வடிக்கின்றன போற்சில வன்றிரைகள் வலித்தெற்றி முழுங்கி
வலம்புரி கொண்டடிக்குங்கட லங்கரை மேல்மகோதை
அணியார்பொழில் அஞ்சைக் களம்" (9 : 3-4)

"அந்தண்கட லங்கரை மேல்மகோதை அணியார்பொழில்
அஞ்சைக் களம்" (10 : 2)

## 2. அவிநாசி

கொங்குநாட்டுத் திருப்பதி. திருப்புக்கொளியூர் எனவும் கூறப்படும். கோவையிலிருந்து 35 கி.மீ. தொலைவில் உள்ளது. இறைவன் திருப்பெயரால் பல ஊர்கள் பெயர்பெற்றுள்ளன. அவ்வகையில் இப்பதியும் ஒன்று. சுந்தரர் முதலையுண்ட பாலகனை மீட்டருளிய திருப்பதி இதுவேயாகும். இப்பதியுறை இறைவன் அவிநாசிநாதர். இறைவி பெருங்கருணை நாயகி. இப்பதியின் இயற்கை அமைப்பையும், வளத்தையும் சுந்தரர் தம் திருமுறையில்,

"பொழிலா ருஞ்சோலைப் புக்கொளியூர்" (2 : 3)
"புரைக்காடு சோலைப் புக்கொளி யூர் அவி னாசி" (4 : 3)
"குரங்காடு சோலைக் கோயில்" (5 : 4)
"புள்ளேறு சோலைப் புக்கொளி யூர்" (9 : 3)

எனச் சிறப்பித்துப் பாடுகின்றார்.

## 3. திரு ஆரூர் பரவையுண் மண்டளி

சோழ நாட்டுத் தென்கரைத் திருப்பதி. தொன்மையான பதி. "பிறக்க முத்தி திருவாரூர்" எனப் புகழப்படுவது. இத்திருப்பதியில் பாடல்பெற்ற மூன்று தலங்கள் 1. திருவாரூர் 2. ஆரூர் அறநெறி 3. ஆரூர் பரவையுள்மண்டளி என்பன. இவற்றுள் ஆரூர் பரவையுள் மண்டளி ஆரூர் கிழக்கு ரத வீதியில் திருத்தேர் நிலையின் அருகில் உள்ளது. பஞ்சபூதத் தலங்களுள் பிருதிவித் தலம். இதனை,

> அண்ணாமலை யரையும் ஆரூர்த் தியாகரையும்
> கண்ணான காளத்தி நாதரையும் – உண்ணான
> சிற்றம் பலவரையும் தென்னானைக் காவரையும்
> நித்தம் பலகால் நினை.

என்னும் பழம்பாடல் தெளிவாக எடுத்துக்கூறுகிறது. சுந்தரர் திருத்தொண்டத் தொகையைப் பாடுவதற்கு, அடியார்களின் பெருமையை விளக்கிய பெருமையுடைய பதி. பரவையார் அவதாரப்பதி. கமலை என்னும் பராசக்தி தவம் செய்யும் இடம். திருமகள், இராமன், மன்மதன் முதலியோர் வழிபட்ட பதி. முசுகுந்த சோழன், மனு நீதிச் சோழன் ஆட்சிசெய்த சிறப்புடையது. இத்தலத்திற்கு, ஷேத்ரவரபுரம், ஆடகேசுரபுரம், தேவயாகபுரம், முசுகுந்தபுரம், கலிசெலாநகரம், அந்தரகேசுரம், வன்மீகநாதபுரம், தேவாசிரியபுரம், சமற்காரபுரம், மூலாதாரபுரம், கமலாலயபுரம் ஆகிய வேறு பெயர்களும் உண்டு. தண்டியடிகள், கழற்சிங்கர், செருத்துணையார், விறன் மீண்டார், நமிநந்தியடிகள் ஆகிய நாயன்மார்கள் திருத்தொண்டாற்றிய திருப்பதி. இங்குறையும் இறைவனுக்கு அறுபதுக்கும் மேற்பட்ட திருப்பெயர்கள் வழங்குகின்றன. அவற்றுள் ஒன்று புற்றிடங்கொண்டான். இறைவி கமலாம்பிகை. இத்தலத்தின் இயற்கையழகையும், வனப்பையும் சுந்தரர் தம் திருமுறையில்,

> "கரந்தையும் வன்னியும் மத்தமும் கூவிளம்
> பரந்த சீர்ப் பரவையுண் டமண்டளி" (10 : 1-2)

என்று மட்டுமே சிறப்பித்துப் பாடுகின்றார்.

## 4. இடையாறு

நடுநாட்டுத் திருப்பதி. மக்கள் வழக்கில் டி. எடையார் என்று வழங்குகின்றது. திருக்கோயிலூரிலிருந்து திருவெண்ணெய்நல்லூர்

வழியாக அரசூர் செல்லும் பாதையில் சித்தலிங்க மடத்தையடுத்து அமைந்துள்ளது. சுகர் முனிவர் வழிபட்ட திருப்பதி. இத்தலத்துறை இறைவன இடையாற்றீசர். இறைவி ஞானாம்பிகை. இப்பதியின் இயற்கை அழகையும் வனப்பையும் சுந்தரர் தம் திருமுறையில்,

"பெண்ணைத் தெண்ணீர்-எற்ற மூரெய்தமானிடை யாறு" (2 : 3-4)

என்று மட்டுமே குறிப்பிடுகின்றார்.

### 5. எதிர்கொள்பாடி

இது சோழநாட்டு வடகரைத் திருப்பதி. மக்கள் வழக்கில் மேலைத் திருமணஞ்சேரி ஆயிற்று. குத்தாலம் – பந்தநல்லூர் சாலையில் அமைந்துள்ள 'அஞ்சார் வார்த்தலை' ஊருக்குள் சென்றால், வலப்புறமாக இப்பதியின் சாலை செல்லும். வேள்விக்குடியில் திருமணஞ் செய்துகொண்டு அத் திருமணக் கோலத்துடன் வந்து தன் அடியவனான அரச குமாரனை அவனுடைய அம்மானைப் போல இறைவன் வந்து எதிர்கொண்டழைத்துச் சென்றமையால் இத்தலம் 'எதிர்கொள்பாடி' என்றாயிற்று. 'எதிர்கொள்பாடி' என்ற இப்பெயர் பண்டைக்காலத்தில் 'எருதுபாடி' என்று திரிந்து வழங்கியதாகவும் கூறப் படுகின்றது. இப்பதியுறை இறைவன் ஐராவதேசுவரர். இறைவி மலர்க் குழல்மாது. இப்பதியின் இயற்கை அழகையும், வனப்பையும் சுந்தரர் தம் திருமுறையில் குறிப்பிடவில்லை.

### 6. ஓணகாந்தண்தளி

தொண்டைநாட்டுத் திருப்பதி. காஞ்சிபுரத்தில் உள்ள பாடல்பெற்ற திருக்கோயில்கள் ஐந்தினுள் இதுவும் ஒன்று. காஞ்சிபுரத்திலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. சுந்தரர் பொன் பெற்ற திருப்பதி. வாணாசுரனுடைய சேனைத் தலைவர்களாகிய ஓணனும் காந்தனும் பூசித்துப் பேறுபெற்ற திருத்தலம்.

இப்பதியுறை இறைவன் ஓணகாந்தேசுவரர். இறைவி ஸ்ரீ காமாட்சி அம்மை. இத்தலத்தின் இயற்கை அமைப்பு பற்றி சுந்தரர் ஏதும் குறிப்பிடவில்லை. (தொடரும்)

---

அறிவிப்பு : -

ஸ்ரீ குமரகுருபரர் இதழில் வெளியாகும் கட்டுரைகளில் காணப்படும் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பாவர் - ஆசிரியர்.

# எடுத்திட்ட பாதம்

**சைவத் தமிழ்மணி, பனசை மு. சுவாமிநாதன்.**

இறை வழிபாட்டில், வழிபாடு இயற்றுவோர் மனநிலை, அதில் பதிவுறும் காட்சிகள், அதன் தொடர்ச்சியாக ஏற்படும் அனுபவம், அதனை அவர்கள் துய்த்து மகிழும் / வருந்தும் நிலை, அதன் வழி அவர்கள் வாக்கில் ஏற்படும் சொற்கோவை – பாடல் – பதிகம் – என்பவை மிகுந்த நுட்பமும் பொருட் செறிவும் உள்ளவை. அவற்றை எந்த அளவு கோலாலும் அளந்து உரைக்க முடியாது. வரையறைக்குள்ளும் அடக்க முடியாது.

தேவார மூவர் இயற்றிய பதிகங்களைத் தருமை ஆதீனம் குருமகா சந்நிதானம், ஸ்ரீ காசிமடம் அதிபர் "கயிலைமாமுனிவர்" ஆகிய ஞானப் பெருந்தலைவர்கள், 40, 50 ஆண்டுகளுக்கு மேலாக நாடோறும் இடையீடுபடாது பாராயணம் செய்து வருகிறார்கள். எனவே, 50 ஆண்டுகளாக வெளிப்பட்டு மிளிராத அற்புத ஒரு நுட்பம் அன்றைய காலை வெளிப்படலாம். அதன் வெளிப்பாடு பேருரையாகவோ, எழுத்து வடிவிலோ புலப்படலாம். எனவே, எந்த நேரத்தில், எச் சூழலில், எவ்விடத்தில் அந்நுட்பங்கள் வந்துசேரும் என்பதை யாராலும் சொல்ல முடியாது.

சமய குரவருள் வரிசை முறையில் இரண்டாமவர் அப்பர். நெஞ்சை உருக்கும் நெடுந் தாண்டகம் உள்ளிட்ட பாவகைகளைப் பயன்படுத்திப் பலநூறு சிந்தனைகளைச் சமய உலகுக்குக் கொடை நல்கியுளளார். அதனுள் ஒன்று காண்போம்.

எம்பெருமான், அடியவர்தம் திருமேனி கழிக்க மேற்கொண்ட திருவுருவங்கள் பல. அவற்றுள் தில்லை நடராசப் பெருமான் நட்டம் பயின்றாடும் திருக்கோலம் பல ஆயிரம் பத்தர்தம் நெஞ்சில் நீடினிய பரவசத்தை உண்டாக்கியுள்ளது. அப்பர் பெருமான், தில்லை நடராசப் பெருமானைத் தரிசிக்கத் திருக்கோயில் புகுந்தார்.

பன்முறையானும் பஞ்சாங்க அட்டாங்க வழிபாடுகள் நிகழ்த்திப் பேரம்பலம் நெருங்கினால் உலக முதல்வனின் ஒப்பில்லாத் திருமேனியழகு அவர்தம் உள்ளத்தில் எண்ணற்ற, எடுத்தியம்பிட எளிதல்லாத உணர்வலைகளை எழுப்பியது.

பெருமானின் திருமுடியைக் கண்டார் நுதல் விழி நாட்டத்தை நுட்பமாய்க் கண்டு கண் எதிரே அக்கோலத்தை நிறுத்தி மனப்பரப்பில் பதிவு செய்தார். இப்படியே திருமேனியில் உள்ள உறுப்பு நலங்களை ஒவ்வொன்றாகப் பார்த்து, உணர்வில் அந்தமில் இன்பம் தலைப்பட்டார்.

திருவடியைக் கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே – என்று அவர்தம் திருவாயே மொழிந்திட ஏதுவாய்க் காட்சி தென்பட்டது. இந்தத் திருவடி எத்தகையது? அதன் மேன்மை என்ன? அது நிகழ்த்திய அற்புதங்கள் எவை? நிரலிட்டு வந்து முன்னே நின்றன. ஆனால் அவற்றுள், 4 காட்சிகள் – அதன் தொடர்பான நிகழ்வுகள், அற்புதங்கள் திரையினில் ஓடும் படமாக அவர்தம் மனத்தில் விரிந்தன. அதன் முகிழ்ப்பில் வந்தது ஒரு திருப்பாட்டு.

இந்தத் திருவடி, தக்கன் இயற்றிய முறை பிறழ்ந்த வேள்வியில், கலந்துகொண்ட சந்திரனுக்குத் தண்டனை வழங்கிட மேலே தூக்கப்பட்டது. அவனைச் சாட எடுத்து தண்டனை வழங்கியது.

மார்க்கண்டேயருக்காக, அவரை அழிக்க முன்வந்த காலனை உதைப்பதற்காக – அவன்தன் செயல்திறனை முடக்கிட – மேலே எடுத்துத் திருவருள் புரிந்து மார்க்கண்டேயரைக் காத்தார்.

பல ஆயிரம் பத்தர்கள் பல்லாண்டு கண்டு வழிபட்டு, மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்திட ஏதுவாக நடனம் ஆடத் தூக்கப்பட்டது.

அகங்கார மிகுதியால் தாம் பெரியவர் எனும் தன் முனைப்புடன் சிவபெருமானின் திருமுடியையும் திருவடியையும் அன்னம், பன்றி வடிவெடுத்துத் தேட முனைந்த பிரமன், திருமால் ஆகியவர்தம் செருக்கு அழிந்திட திருவடியை மேலே எடுத்து அற்புதத் திருவிளையாடல் புரிந்தார்.

தக்கனைச் சாட, காலனைவீட, பிரமன், திருமால் – தேட, சிற்றம்பலத்தில் ஆட – எடுத்த பாதமே என்னை ஆட்கொண்டது என்று அனுபவத் தொகுப்பை அண்ட சராசரம் எங்கும் விரித்துப் பதிவு செய்கிறார். அப்பாடல், தில்லைத் திருப்பதியில், அப்பர் அருள் திருவாயால் மலர்ந்த பனுவல்களில், திருவிருத்தமாய் அமைந்த 10 ஆம் பாடல்.

‘நட்டம், ஆட எடுத்திட்ட பாதம்
அன்றோ நம்மை ஆட்கொண்டலே’’

# செந்தில் ஆண்டவன் அடியார்கள்

பேராசிரியர் முனைவர் ந. முருகேசன், சென்னை.

**உன்புக ழேபாடி நானினி அன்புடன் ஆசார பூசை செய்து**
**உய்ந்திட வீணாள்ப டாதருள் புரிவாயே**

– திருப்புகழ்.

எல்லாம்வல்ல பரம்பொருளை, பிரமத்தை, தமிழர்கள், 'முருகன்' என்ற பெயரால், தொன்றுதொட்டு வழிபட்டு வருகின்றனர். வேறுவேறு பெயர்களால், வேறு வேறு மாநிலங்களில், நாடுகளில், முருகப்பெருமான் வழிபடப்பட்டாலும், தமிழகத்தில், சிறப்போடும், உரிமையோடும் வழிபடப்படுவதால், 'தமிழ்க் கடவுள்' என்று போற்றப்படுகிறான். இவ்வண்ணம் கூறுவது வெற்றாரவாரம் அன்று.

**''தமிழ்க் கினிய குருபர''**
**''முத்தமிழை ஆயும் வரிசைக்கார''**
**''செந்தமிழ் சொல் நாலுகவிதைக்கார''**
**''செந்தமிழ் சொல் பாவின் மாலைக்கார''**
**''தமிழ் விரக''**

முதலிய திருப்புகழ்த் தொடர்களை ஆழ்ந்து நோக்குக.

சில திருக்கோயில்களில், பிரகாரங்களில், முருகன் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளதால், முருகனைச் சிறு தெய்வம் என்று சிலர் அறியாமையால் கருதுகின்றனர். அவ்வாறு கருதுவது தவறு. ''பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பு'' என்று கச்சியப்பர் பாடுகின்றார். 'கமையற்ற' என்று தொடங்கும் திருப்புகழில், எம்பெருமான் முருகக் கடவுளை, மாயை, விந்து, நாதம், மேலான சக்தி இவைகளுக்கு அப்பாற்பட்ட பிரமம் என்ற பொருள் தரும் விதத்தில், ''மாயை விந்து நாதம் வரசத்தி மேலான பரவத்துவே'' என்று அருணகிரிநாதர் இசைக்கின்றார். ''செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாளா'' என்று முத்துக் குமரனைப் பாடி, அவன் போக்கும் வரவும் இலாப் புண்ணியன் என்றும், பரப்பிரமம் என்றும், குமரகுருபர சுவாமிகள் அழுத்தமாகப் பாடுவதை நோக்குக.

எண்ணற்ற திருத்தலங்களில், எல்லாம் வல்ல முருகப் பெருமான் எழுந்தருளி நம்மனோர் உய்ய அருள்பாலிக்கின்றான். சிவனடியார்கள் தில்லையை முக்கியமாக நினைப்பது போல, வைணவர்கள் திருவரங்கத்தை முக்கியமாக நினைப்பது போல, முருகன் அடியார்கள் திருச்செந்தூரை முக்கியமாக நினைக்கின்றனர். அறுபடை வீடுகளில் இரண்டாவது படைவீடு திருச்செந்தூர். ஈராயிரம் ஆண்டுகட்கும் மேலான பழமைமிக்கது திருச்செந்தூர். ‘‘அலைவாய்’’ என்றும் ‘‘ஜெயந்திபுரம்’’ என்றும் அழைக்கப்படும் செந்தில்நகர், சங்க இலக்கியங்களிலும், சங்கம் மருவிய காலச் சிலப்பதிகாரத்திலும் குறிப்பிடப்படுகின்றது. ‘‘வெண்டலைப் புணரி அலைக்கும் செந்தில்’’ என்று புறநானூற்றிலும், ‘‘திருமணி விளக்கின் அலைவாய்’’ என்று அகநானூற்றிலும், ‘‘உலகம் புகழ்ந்த ஓங்குயிர் விழுச்சீர் அலைவாய்’’ என்று திருமுருகாற்றுப்படையிலும், ‘‘சீர்கெழு செந்தில்’’ என்று சிலப்பதிகாரத்திலும் திருச்செந்தூர் போற்றப்படுகின்றது.

‘‘தென்திசைத் தென்றல் வீசும் பொழிற் செந்தில்’’, ‘‘திருவளர் செந்தில்’’, ‘‘செஞ்சொற் புலவர்க்கு அன்புற்ற திருச்செந்தில்’’, ‘‘மனோகர செந்தில்’’, ‘‘கயிலை மலை அனைய செந்தில்’’ முதலிய திருப்புகழ்த் தொடர்களும், ‘‘நாறுமலர்க் கந்திப் பொதும்பர் எழு கார் அலைக்கும் சீர் அலைவாய்’’ என்ற கந்தர் கலிவெண்பாவின் தொடரும், செந்திலின் அருமை பெருமைகளைச் சுட்டும் வைர வரிகளாகத் திகழ்பவை ; முருகன் அடியார்களின் நெஞ்சங்களை விட்டு நீங்காத மாணிக்கத் தொடர்கள்.

செந்திலாண்டவன் கருணையே வடிவமானவன் ; உள்ளம் உருகி வழிபடும் அடியவரைக் காப்பாற்றி அருள்பவன் ; அடியார்க்கு எளிய பெருமான் ; திரிபுரதகனரும் வந்திக்கும் சற்குருநாதன் ; புலவன் ; நினையும்தன தன்பர் பழவினை களைந்து அருள்பவன் ; மாசில் அடியார்கள் வாழ்கின்ற ஊர் சென்று தேடி விளையாடியே அங்ஙனே நின்று வாழுமயில் வீரன் (திருப்புகழ்) ; மொழியும் அடியார்கள் கோடி குறை கருதினாலும் வேறு முனிய அறியாத பெருமான் ; புரிபிழை பொறுக்கும் சாமி என்றெல்லாம் போற்றப் படுபவன்.

**''வந்த வினையும் வருகின்ற வல்வினையும்**
**கந்தனென்று சொல்லக் கலங்குமே - செந்திநகர்ச்**
**சேவகா வென்று திருநீ றணிவார்க்கு**
**மேவவா ராதே வினை''**

என்ற வெண்பா, செந்திலாண்டவனின் அருமை பெருமைகளைச் சுருக்கமாகக் கூறும்.

செந்திலாண்டவனை இயல்பாகவே வழிபட்டு அருள் பெற்றவரும் உளர் ; செந்திலாண்டவனே ஆட்கொண்டு அருள, அருள்பெற்றவர்களும் உளர். இவ்வடியார்கள் பலர். செந்தில் ஆண்டவனை நம்பிக் கெட்டவர் எவரும் இலர் என்பதை வேலவன் அன்பர்கள் உணர்வார்கள். இவ்வன்பர்களும் மற்றவர்களும் நீள நினைக்கும்வண்ணம், செந்திலாண்டவன் அருள்பெற்ற அடியார்களில் சிலரைச் சிந்திக்கலாம்.

**நக்கீரர்**

தமிழ்ச் சங்கப் புலவர் ; பெருங் கவிஞர் ; அகத்திலும் புறத்திலும் பல அருமையான கவிதைகளைப் பாடியவர் ; 'நெற்றிவிழி காட்டினும் குற்றம் குற்றமே' என்று சிவபரம்பொருளோடு வாதாடியவர் எனப் பெரும் புகழ் பெற்றவர் நக்கீரர். இவர் திருப்பரங்குன்றத்துக் குளக்கரையில் சிவபூசை செய்துகொண்டிருந்தார். அப்போது அவர் அமர்ந்திருந்த குளக்கரை அரசமரத்திலிருந்து உதிர்ந்த இலையொன்று, தண்ணீரில் பாதியாகவும், கரையில் பாதியாகவும் விழுந்தது. நீரில் விழுந்தது மீனாகவும், கரையில் விழுந்தது பறவையாகவும் மாறியது. அவை ஒன்றையொன்று இழுத்தது. இவ்வதிசயக் காட்சியைக் கண்டு வியந்த நக்கீரர், சிவபூசையில் தவறு செய்திட, கற்கிமுகி என்ற பூதம், அவரைப் பிடித்துச் சிறையில் அடைத்தது. சிறை ஒரு மலைக் குகை. 999 பேர் அங்கு இருந்தனர். 1000 பேர் ஆனால் பூதம் அனைவரையும் விழுங்கிவிடும். அனைவரும் அஞ்சினர். நக்கீரர் முருகப்பெருமானை நினைந்து உருகிப் பாடினார் நெடிய பாடல் ஒன்று. அதுவே திருமுருகாற்றுப் படை. இந்நூலே ஆறுபடை வீடு என்பதற்கு அடித்தளம் இட்டது. திருப்பரங்குன்றத்தைப் போற்றிப் புகழ்ந்துவிட்டுத் திருச்செந்தூரை மனத்தால் நினைத்துப் பாடுகிறார். ஆறுமுகங்களையும் பன்னிரு

கரங்களையும் வருணித்துப் பாடி, ‘உலகம் புகழ்ந்த ஓங்குயிர் விழுச்சீர் அலைவாய்’ என்று செந்தூரை மனக் கண்ணால் பார்த்து வேண்டுகின்றார். தென்திசை நோக்கி, வள்ளி, தெய்வானையோடு எழுந்தருளியுள்ள சண்முகநாதனைப் பாடுகின்றாரோ என நினைக்கத் தோன்றுகிறது. திருமுருகாற்றுப்படையைப் பாடி முடித்ததும் முருகப்பெருமானின் வெற்றிவேல் குகையைப் பிளந்து பூதத்தைக் கொன்று அனைவரையும் காத்தது. காத்தவுடன் வெண்பாக்கள் மணம்வீசப் பூக்களாய் மலர்ந்தன.

**“குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்**
**அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும் – இன்றென்னைக்**
**கைவிடா நின்றதுவும் கற்பொதும்பில் காத்ததுவும்**
**மெய்விடா வீரன்கை வேல்”**

**“உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்**
**பின்னை ஒருவரையான் பின்செல்லேன் – பன்னிருகைக்**
**கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்**
**வேலப்பா செந்தில்வாழ் வே”**

என்று நன்றி உணர்ச்சி பொங்கிடப் பாடினார். இவ்வரிய நிகழ்ச்சியைப் பிற்காலப் புலவர்கள் பலரும் பாடிப் போற்றியுள்ளனர். அருணகிரிநாதர்,

**“பழுத்தமுது தமிழ்ப்பலகை**
**இருக்குமொரு கவிப்புலவன்**
**இசைக்குருகி வரைக்குகையை**
**இடித்துவழி காணும்”**

என்று சந்தம் பொங்கச் செந்தமிழில் போற்றிப் பாடியுள்ளார். ‘ஆபத்தில் அஞ்சேல் என்ற பெருமாளே!’ என்று அருணகிரிநாதர் பாடியது பொருத்தமானதன்றோ!

### ஆதிசங்கரர்

ஆதிசங்கரரை அறியாதவர் எவர்? அத்வைதத்தைப் போதித்த அவர், வழிபாட்டு நெறிகளை ஒழுங்குபடுத்தி, ஷண்மத ஸ்தாபனம் செய்தவர். அவர் எழுதிய சிவானந்த லகரி, சௌந்தர்ய

லகரி, பஜகோவிந்தம், விவேக சூடாமணி முதலிய நூல்கள் புகழ்மிக்கவை. சந்நியாசியாகியும் தாயன்பை மறக்காதவர், பட்டினத்தார்போல. சமயத் தொண்டாற்றிவரும்போது, ஆதிசங்கரர் மீது, அபிநவகுப்தன் என்பவன் ஆபிசாரம் என்னும் சூனியப் பிரயோகம் செய்து, கொடிய நோயை உருவாக்கினான். துன்புற்ற சங்கரர் திருக்கோகர்ணத்தில் இறைவனை வழிபட்டபோது, சிவபெருமான், 'செந்திலாண்டவனை வழிபட்டால் நோய் தீரும்' என்று உணர்த்த, அவர், திருச்செந்தூர் வந்தார். வடமொழியில் 33 பாடல்களைக் கொண்ட 'ஸ்ரீ சுப்ரமண்ய புஜங்கம்' என்ற நூலைப் பாடினார். அவர்தம் நோய் நீங்கியது. ''முருகக் கடவுளே! இங்கே வருபவர்கள் பிறவிக் கடலில் இருந்து கரையேறிவிடுவார்கள் என்பதை உணர்த்தவே, கடற்கரையோரம் கோயில்கொண்டுள்ளாய்! உன்னைச் சரணடைந்த என்னையும் பிறவிக் கடலில் இருந்து கரையேற்று'' என்று உருகுகின்றார் ஆதிசங்கரர் முருகன் அடியாராய்.

**வரகுண பாண்டியன்**

பாண்டியர் வரலாற்றில் குறிப்பிடத்தக்க பேரரசனாகத் திகழ்ந்தவன் இரண்டாம் வரகுண பாண்டியன். ஒன்பதாம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டையாண்ட பேரரசன் இவன். போர் பல புரிந்து வெற்றி பல ஈட்டிய மாமன்னன் என்று இவனைப் பாண்டியர் வரலாறு கூறுகின்றது. 'வரைபுரையும் மணிநெடுந்தோள் மன்னர் கோன் வரகுணவர்மன்' என்று சின்னமனூர்ச் செப்பேடுகள் போற்றுகின்றன. சோழ மன்னர்களைப் போலப் பாண்டிய மன்னர்களும் சைவ சமயம் வளர்த்தவர்களே. இவ்வரகுண பாண்டியன் திருச்செந்தூர் முருகப்பெருமானிடம் பெரும் பக்தி கொண்டவனாகவும், ஆண்டு முழுவதும் நாள் வழிபாடு நடப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தான் என்றும் பேராசிரியர் டி.வி. சதாசிவ பண்டாரத்தார் தாம் எழுதிய பாண்டியவர் வரலாற்றில் பின்வருமாறு எழுதுகின்றார் : ''இவ் வரகுணன் திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ள முருகவேள் திருவடிகளில் பெரிதும் ஈடுபாடுடையவன். இவன், அப்பெருமானுக்கு ஆண்டு முழுவதும் நாள் வழிபாடு நடத்துவதற்கு ஆயிரத்து நானூறு பொற்காசுகளை நிவந்தமாக வழங்கி அவற்றைப் பன்னிரண்டு ஊர்களுக்குப் பிரித்துக் கொடுத்து, காசு ஒன்றுக்கு ஆண்டொன்றிற்கு நெற்பொலிசை இரண்டு கலமாக அப்பன்னிரு

ஊரினரும் திருச்செந்தூர்க் கோயிலுக்கு இரண்டாயிரத்தெண்ணூறு கல நெல் ஆண்டுதோறும் அளந்து வருமாறு ஏற்பாடு செய்துள்ளனன். இச்செய்தி, நாள்வழிபாட்டுத் திட்டங்களுடன் அக்கோயிலில் உள்ள ஒரு கருங்கற் பாறையில் இவ்வரகுண பாண்டியனது பதின்மூன்றாம் ஆட்சியாண்டில் வரையப்பட்டுள்ளது.'' (டி.வி. சதாசிவ பண்டாரத்தார், பாண்டியர் வரலாறு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1950, பக்.75-76) பண்டாரத்தார் கூற்று, ஆண்டு முழுவதும், இடையறாது, நாள்வழிபாடு தொடர்ந்து நடைபெற வேண்டும் என்ற வரகுண பாண்டியனின் ஈடுபாட்டையும் பக்தியையும் உணர்த்தும்.

**அருணகிரிநாதர்**

திருமுருகன் அடியார்கள் எல்லோரும் அறிந்த பெயர் 'அருணகிரிநாதர்' என்பது ; அறிந்த பனுவல் திருப்புகழ். அதிகம் கற்காதவர்கூட, 'முத்தைத்தரு' என்று தொடங்கும் ஒரு திருப்புகழ்ப் பாடலையாவது அறிந்திருப்பர் ; கேட்டிருப்பர். திருவண்ணா மலையில் எம்பெருமான் குமரக் கடவுளால் காப்பாற்றப்பட்டு, உபதேசமும் செய்யப்பட்டு, 'திருப்புகழ் பாடுக!' என்று அன்புடன் கட்டளையிடப்பட்டு, உய்வு பெற்றவர் அருணகிரிநாதர். எத்தனையோ பிறவிகளில் செய்த நல்வினைகளால், செந்தமிழ்க் கடவுளின் சந்தனம் மணக்கும் திருக்கரங்களால் தாங்கப்பட்ட பெருமைக்குரியவர் அருணகிரிநாதர். சைவ நாயன்மார்கள்போல, முருகன் எழுந்தருளியுள்ள திருத்தலங்கள்தோறும் சென்று, திருப்புகழ் பாடிய பெருந்தகை ; கவிராஜர். 'தேவாரம் பாடப்பெற்ற தலம்' என்று சிவத்திருத்தலங்களைக் குறிப்பிடுவது போல, 'திருப்புகழ் பாடப்பெற்ற திருத்தலம்' என்று முருகன் தலங்கள் குறிப்பிடப்படுவது நோக்கத்தக்கது.

கந்தக் கடவுளின் கருணையை முழுவதும் பெற்ற அருணகிரிநாதர், தம் கடவுள் போலவே கருணை உள்ளம் கொண்டவர். தலயாத்திரை சென்ற சந்தக்கவிஞர் செந்திலில் பல நாட்கள் தங்கித் தரிசித்துப் பல பாடல்களைப் பாடியுள்ளார். பழனிக்கு 100 பாடல்கள் ; செந்தில் பதிக்கு 84 பாடல்கள் கிடைத்துள்ளன. பழனிக்கு அடுத்து அதிகம் திருப்புகழ் பாடல்கள் செந்திலுக்குத்தான். செந்திலாண்டவனிடம் பெரும் பக்திகொண்ட அருணை முனிவர், எம்பெருமானின் நடனக் காட்சியைக் காண விரும்பிக் கேட்டார்.

மாசி மாதம் நடக்கும் திருவிழாவில், உலாவரும் கந்தக் கடவுள், அருணகிரியார்க்கு நடனம் புரிந்து பேரருள் புரிந்தான். ''தண்டையணி'' என்று தொடங்கும் பாடல் அப்போது பாடப் பெற்றது என்பர். ''கொண்ட நடனம் பதம் செந்திலிலும் என்றன் முன் கொஞ்சி நடனம்கொளும் கந்தவேளே!'' என்ற பாடுவது கவனிக்கத்தக்கது.

**''கந்தரநு பூதிபெற்றுக் கந்தரநு பூதிசொன்ன**
**எந்தையருள் நாடி இருக்குநாள் எந்நாளோ!''**

– தாயுமானவர்.

**குமரகுருபர சுவாமிகள்**

வண்தமிழ் முழங்கும் தென்பாண்டி நாட்டில் பிறந்து, வரையாது வழங்கும் வள்ளல் செந்தில் முருகன் திருவருள் பெற்று, வித்தக ஞானியாம் தருமையாதீன மாசிலாமணி தேசிகரிடம் ஞான உபதேசம் பெற்று, துறவுபூண்டு, வடபுலம் வரை சென்று, வேற்று மதம் உலாவிய அங்கே, வினைநீக்கிப் பேரருள்புரியும் சிவபரம் பொருளை வழிபடும் சைவ சமயத்தை வளர்த்துத் திருமடமும் உருவாக்கிய ஒரு பெரும் கவிஞர் குமரகுருபர சுவாமிகள் மட்டுமே. செந்தில் ஆண்டவனின் அருள்பெற்றவர்களில் முக்கியமானவர்.

17 ஆம் நூற்றாண்டு. தென்பாண்டி நாட்டில் பொருநை ஆற்றின் வடகரையில் ஸ்ரீவைகுண்டம் என்னும் தலம் உள்ளது. திருமால் அருள்புரியும்தலமிது. இதன் இடப்புறப் பகுதியைக் கயிலாசபுரம் என்பர். இங்கு, சண்முகசிகாமணிக் கவிராயர், சிவகாம சுந்தரி என்னும் அம்மையாரோடு இல்லறம் நடத்தி வந்தார். மக்கட்பேறு சிறிதுகாலம் இல்லாமல் இருந்து, செந்தில் கந்தன் திருவருளால் ஆண் குழந்தை பிறந்தது. ஐந்தாண்டு வரையில், பேசாமல் ஊமை போல் இருந்தமையால், குழந்தையை ஊமை என்று நினைத்தனர் பெற்றோர். திருச்செந்தூர் சென்று, ஒரு மண்டலம் விரதம் இருந்து, செவ்வேட் பரமனை வணங்கினர். 45 ஆவது நாள், எம்பெருமான் சந்நிதியில் முருகன் திருவருளால் குழந்தை பேசியது. செந்திலாண்டவன் 'குருபரா' என்றழைத்துப் புலமையும் ஞானமும் வழங்கப் பேசிய குழந்தை, 'கந்தர்

கலிவெண்பா' என்ற அற்புதப் பனுவலை இயற்றியது. முருகன் அடியார்கள் பாராயணம் செய்யும் நூலிது. 'சைவ சித்தாந்த சாரம்' என்பர். செந்தில் ஆண்டவனின் பேரருள் பெற்றுப் பாடிய இனிய கவிதைப் படைப்பாகும் 'கந்தர்கலிவெண்பா'.

**"இம்மைப் பிறப்பில் இருவா தனையகற்றி**
**மும்மைப் பெருமலங்கள் மோசித்துத் - தம்மைவிடுத்(து)**
**ஆயும் பழைய அடியா ருடன்கூட்டித்**
**தோயும் பரபோகம் துய்ப்பித்துச் - சேய**
**கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்டு**
**அடியேற்கு முன்னின் றருள்"**

என்று அழகாக நூலை முடித்திருப்பார் கவிஞர். சிவபரம்பொருளே முருகன் என்ற எண்ணமும், வேதமும் வேதாந்த முடிவும் குறிப்பிடும் பரப்பிரமமே முருகன் என்ற அழியாத கொள்கையும் உடையவர் அவர். "செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாளா" என்று முத்துக்குமாரசாமியைப் பாடுவது சிந்திக்கத்தக்கது. சிற்றிலக் கியங்கள் பல படைத்துச் செந்தமிழ் மொழிக்கும், சமயப் பூசல்களை நன்குணர்ந்து, சைவ சித்தாந்தத்தைக் காசியில் நிலைநிறுத்தி, தமக்குப் பின்னாலும் திருத்தொண்டு தொடர, ஞான பரம்பரையை உருவாக்கித் திருமடம் ஒன்றை நிலையாகக் காசியில் தோற்றுவித்து, சைவத்துக்கும் அரும்பணியாற்றினார் குருபரர், செந்தில் முருகன் திருவருளால்.

**கற்றைசடை முடிஈசர் விழிபி றந்த**
**கவின்செந்தில் ஆண்டவனின் அருளைப் பெற்று,**
**நற்றமிழில் கவிபாடி, தருமை ஞானி**
**நவின்றஞான மயமாகி, காசி சென்று,**
**பொற்றமிழை, சைவத்தை நனிவ ளர்த்துப்**
**பணிதொடரப் பரம்பரையைத் தோற்று வித்துக்**
**கொற்றவரும் பணிந்தேத்த பெருமை கொண்ட**
**குமரகுரு பரர்தாளை வணங்கு வோமே!**

- ந. முருகேசன்.

(தொடரும்)

# அடியவர் வரலாறு

**''சிவத்தமிழ்ச்செல்வர்''**

**பேராசிரியர் முனைவர் வே. சீதாலெட்சுமி, திருப்பனந்தாள்.**

(சென்ற இதழ் தொடர்ச்சி)

## கோச்செங்கட் சோழன்

முற்பிறவியிலே சிலம்பியாக இருந்து, ஆனைக்கா அண்ணலுக்கு வெயில், தூசிகளால் ஊறு நேராவண்ணம் வாய் நூலினால் நாளும் கூடு கட்டியவர். யானை ஒன்று தான் பூசிக்கத் தடையாயிற்று இவ்வலை என நாளும் அதனை அறுக்க, மீண்டும் சிலம்பி கூடுகட்டியது. இறைவற்குச் செய்த இத்தொண்டில் சிலம்பியின் அன்பும், உரமும், முயற்சியும் போற்றற்பாலன. இந் நல்வினைப் பயனால், அடுத்த பிறவியில் சிலம்பி கோச்செங்கட் சோழ அரசனாகப் பிறந்தது. தன் முன்வினைத் தொடர்பினால், இப்பிறவியிலும் இக் கோச்செங்கட் சோழன் யானை புகாவண்ணம் எழுபது மாடக் கோயில்களைக் கட்டி நாடெங்கிலும் சைவம் தழைக்கவும், சிவமணம் கமழவும் தொண்டாற்றினான்.

'எழுமைக்கும் ஏமாப்புடைத்து' என்பதால் ஏழு பிறவிகள் உண்டு என்பது மக்கள் நம்பிக்கை. நமது வாழ்வு நாம் செய்யும் வினைக்கீடாகப் பெறுவது. அதனால் இவ் வரலாறுவழி சம்பந்தர் சமுதாயத்திற்கு ஓர் உண்மையை உணர்த்துகிறார். ஒரு பிறவியில் ஒருவர் செய்யும் நல்வினை அடுத்த பிறவியில் அவர்கட்கு பெரும் நன்மையை விளைவிப்பது உறுதி என்கிறார். ஒரு சிலம்பியின் செயலுக்குக் கிடைத்தது, மறு பிறவியில் அரச வாழ்வு. இவ் வரலாறு வழி, தொண்டு, பக்தி, அன்பு, நல்வினை யாவும் பிறவிதோறும் தொடர்வன என்பது உறுதிப்படுத்தப்படுகிறது. மக்களும் தூநெறியோடு தொண்டு செய்தால், இறை வழிபாடு செய்தால் கட்டாயமாக உயர்நிலையை அடையலாம் எனச் சமுதாயத்திற்கு உணர்த்தப்பட்டது. தொண்டே வாழ்வின் உயர்வுக்கு மூலதனமாகும். சம்பந்தர் இதனை,

"சிலந்தி செங்கட் சோழனாகச் சொய்தான் ஊர்" (2:63:7)
"செம்பியன் கோச் செங்கணான் செய் கோயிலே" (3 :18:2)

எனக் குறிப்பிடுகிறார்.

**நமிநந்தி அடிகள்**

ஆரூர் கோயிலில் நாளும் விளக்கெரிக்கும் நெறியினர். சரியைத் தொண்டிலே ஒன்று திருக்கோயிலில் விளக்கெரித்தல். 'தீதுஇல் திருவிளக்கு இட்டு' என்கிறது சித்தியார். ஒருநாள் விளக்கெரிக்க, ஒரு வீட்டில் எண்ணெய் கேட்க, அவ்வீடு அமணர் வீடாக இருந்தது. அவர்கள், 'கையில் அனலேந்தியாடும் இறைவற்கு விளக்கு வேண்டாம், வேண்டுமெனில் நீரால் எரிக்க' எனப் பரிகசித்தனர். நமிநந்தி அடிகள் மன வேதனையுடன் எம்பெருமான் முன் வருந்த, அசரீரியாக நீரால் விளக்கெரிக்குமாறு ஆணை இறையிடமிருந்து பிறந்தது. அதன்படி கமலாலயக் குளநீரைக் கொணர்ந்து கோயிலெங்கும் விளக்கேற்ற, அது எரிந்தது. யாவரும் வியந்தனர்.

இறைவன் தன்னை நம்பியவர்க்கும், தன்னிடத்துப் பேரன்பு கொண்டார்க்கும் ஏதம் ஏற்படின் அதனை உடனே நீக்கியருளுபவன். நமிந்தியின் உண்மை அன்பு, பக்தி, விடாத தொண்டு முயற்சி யாவரினும் மேலாம் இறையருள் சித்திக்கத் துணைநின்றது. நமிந்தியின் தொண்டு உலக மக்கட்கு ஒரு படிப்பினை. சம்பந்தர் "சார்ந்தவர்க்கின்பங்கள் தழைக்கும் வண்ணம் நேர்ந்தவர்" (113-5) என்றார். "வேண்டுவோர் வேண்டுவது ஈவான் கண்டாய்" என்பது இறைநிலை. சமணர்கள் இகழ்ச்சி அவர்களுக்கே வீழ்ச்சியாயிற்று. பரிகாசமாக 'நீரால் விளக்கெரிக்க' என்ற சமணர் சொல்லை உண்மையாக்கினார் சிவபெருமான். எனவே, இவ்வியப்பைக் கண்ட மக்கள் கட்டாயமாக சைவத்தின் மேன்மையை உணர்ந்து அதன்வழி நடக்க முன்வருவர் என்பதும் உறுதி. சமணத்தின் சமயக் காழ்ப்பும், சைவத்தின் தொண்டும் இங்கு சம்பந்தரால் இச்சரிதம் வழி உணர்த்தப்படுகிறது. சம்பந்தர், "நமிந்தியடிகட்கு நல்குமவன்" (1:62:6) எனவும், "ஆரூர் நறுமலர்நாதன் அடித் தொண்டன் நமிநந்தி நீரால் திருவிளக்கு இட்டமை நீள் நாடு அறியுமன்றே" என நாவரசரும் (4:102:2) குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

**புகழ்த்துணையார்**

சிவன் மிக விரும்புவது பூசனையேயாம். உமையிடத்தே இறை, "எண்ணிலாகமம் இயம்பிய இறைவர்தாம் உண்மையாவது பூசனை என உரைத்தருள அண்ணலார்தமை அர்ச்சனை புரிந்து ஆதரித்தான் பெண்ணின் நல்லவளாயினப் பெருந்தவக் கொழுந்து" எனக் குறிப்பிட உமையும் அர்ச்சனை வழிபாடு செய்தாள் என்பதாம்.

புகழ்த்துணையார் நாடோறும் நீரால் அபிடேகித்தும், மலரால் அர்ச்சித்தும், நிவேதத்தும் தொண்டு வழிபாடு செய்தார். காலை மாலை இரு

வேளையும் இது நிகழ்ந்தது. நாட்டில் வறுமை வர பசியின் வருத்தத்தால் இறைக்குரிய மஞ்சனக் குடத்தை இறைமீதே போட்டு வீழ்ந்தார். அலந்த அடியாரின் துயர் நீக்க இறைவன் ஊர்ப் பஞ்சம் முடியும் வரை நாளும் ஒரு படிக்காசு நல்கினன். அக்காசு பெற்று உடல் வருத்தும் பசிப்பிணி இன்றியும், முற்றுணர்வால் அகமகிழ்ந்தும் அன்புத் தொண்டை இறுதிவரை ஆற்றினார். இதனைச் சம்பந்தர் "அலந்த அடியான் அற்றைக்கு அன்று ஓர் காசு எய்தில் புலர்ந்த காலை மாலை போற்றும் புத்தூரே" (2:63:7) என்றார். இறையடியாரது இறை பணிக்கு யாதொரு தடையோ, தீங்கோ நேருமாயின், அதனை உடனே நீக்கி இறைவன் அருளுவான். நம்பிக்கையோடு தொண்டு செய்தால், சிவ வழிபாடு செய்தால் பெறுதற்கரிய பேறு பெறுவது உறுதி என்பதை இச் சரிதம்வழி சம்பந்தர் உலகுக்க காட்டுகிறார். இப்பிறவியின் தொண்டுக்கு இப்பிறவியிலேயே பயன் கிடைக்கும் என்பது விளக்கப்படுகிறது.

## அமர்நீதியார்

சிவனடியாரைச் சிவனாகவே கருதி வழிபடுவது வழிபாட்டில் ஒரு வகை. இது அடியார் வழிபாடு எனப்படும். அடியவர்கள் திருவேடத்தாலும் பாவனையாலும், அருட்குறி வழி நின்று செய்யும் அகவழிபாட்டானும் இவையனைத்தையும் கடந்துநின்ற ஞானநிட்டையாலும் சிவமேயாவார். எனவே பாசமுதல் கெட அடியவர்களை நேசத்தால் தொழுது ஒழுகுதல் அவசியமானது என்கிறது சித்தியார்.

அமர்நீதியார் வணிகர். பழையாறையில் வாழ்ந்தவர். சிவனடியாரைச் சிவனாகவே கருதி, சித்தியார் இலக்கணத்திற்கேற்ப வாழுபவர். நாளும் சிவனடியார்க்கு திருமடத்தின்வழி உணவு நல்கியும், கந்தை, கோவணம், கீழுடை நல்கியும், பொருள் கொடுத்தும் ஆதரிப்பவர். இவரது தூநெறியை உலகிற்கு உணர்த்த இறைவன் சிவனடியாராக வந்து ஒரு கோவணத்தைப் பத்திரமாக வைக்குமாறு கொடுத்துப் பின் வந்து கேட்க அக்கோவணம் மாயமாய் மறைந்தது. இறைவனோ 'தனது கோவணம் அல்லது தனது மற்றொரு கோவணத்திற்கீடாகப் பொருள்' எனக் கேட்டனன். அடியாரும் தம்மிடத்துள்ள பொன், பொருள் யாவும் கொடுத்தும் துலை நேரில்லை. இறுதியில், ஐந்தெழுத் தோதி அவரும், மனைவியும், மகனும் நிற்க துலை நேர்நின்றது. ஒரு கோவணத்தைக் கொண்டு ஓர் அடியாரின் அன்பையும், தொண்டினையும் உலகோர்க்கு இறைவன் உணர்த்தினான் என்பது வரலாறு. இதனைச் சம்பந்தர்,

"கொடிறனார் யாதும் குறைவிலார் தாம் போய்க்
கோவணம் கொண்டு கூத்தாடும்" (3:121:1)

என்றார். அடியார்க் கொன்று செய்தால் அது இறைவனுக்குச் சேர்ந்துவிடும். 'நடமாடுங் கோயில் நம்பர்க்கொன்றீயின் படமாடும் கோயிற் பரமர்க் கங்காம்' என்பது திருமந்திரம். அடியார் வழிபாடு ஆண்டவனை அடையும் நற்பேறு என்பதை உணர்த்த சம்பந்தர் இச் சரிதத்தை எடுத்தாண்டார். தாயுமானவரும் 'அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கிவிட்டுவிட்டால், இன்பநிலை தானாக வந்தெய்தும் பராபரமே' என்றார்.

**தண்டியடிகள்**

இவரும் சரியை வழி நின்றவர். இறைவன் திருக்கோயில் முன் திருக்குளம் ஒன்று கல்ல திட்டமிட்டு, குளம் கல்லும் தொண்டு செய்தார். பிறப்பால் குருடர். அகவழிபாடு உடையவர். ஒரு கம்பை நட்டு, அதில் கயிறு கட்டி அக்கயிற்றைப் பிடித்துக்கொண்டு சென்று குளம் கல்லினார். இவரது குருட்டையும், தொண்டையும் இழிவுபடுத்தினர் சமணர்கள். மனம் நொந்து இறைவனிடம் வேண்டினார். இறையருளால் தண்டிக்கு கண் கிடைத்தது. இழிவு பேசிய சமணர்கள் குருடராயினர். இதனைச் சம்பந்தர் "அண்டர் தொழு தண்டி பணி கண்டடிமை கொண்டவிறை" (3:68:10) இச்சரிதவழி சம்பந்தர் உண்மைத் தொண்டும், மெய்யான இறையன்பும், பலமடங்கு நன்மைகளைத் தரும் என்ற கருத்து உணர்த்தப்படுகிறது. சமணர்கள் பிற மதத்தகை நகையாடும் இழிநிலை, சைவத்தின் முன் சமணத்தின் செயலற்ற நிலை, இழிவு யாவும் விளக்கப்படுகிறது. சமணம் உண்மைச் சமயம் அன்று என அந்நெறி நின்றார்களும் சிந்தித்து செயல்பட்டு, சைவம் சாருவதற்கும், சைவத்தின் நுண்மையை உணருவதற்கும் இச்சரிதம் பெரிதும் துணைநிற்கின்றது. சமணர்களது கொள்கைகளும் வழிபாடும் பயன்தராது என்பதை இவ்வரலாறு நிரூபிக்கின்றது.

**நெடுமாற நாயனார், மங்கையர்க்கரசியார், குலச்சிறை நாயனார்**

நெடுமாறர் பாண்டியர், மதுரையை ஆட்சிபுரிந்தவர். வெள்ளை நீறணியுங் கொற்றவன் என்பதால் முதலில் சைவனாய் இருந்து, பின்பு சமணனாயிருக்கலாம் என்பது துணிபு. சமணம் சார்ந்தது மட்டுமன்றி சமண சமயிகள் தம் கைப்பாவையாக இயங்கினான். அவர்கள் கூறும் எதனையும் நிறைவேற்றும் உள்ளம் உடையனாயினான். இவனால் மதுரை நாட்டிலும் சமணம் தழைத்தது.

மங்கையர்க்கரசியார் நெடுமாறரின் மனைவி, மணிமுடிச் சோழனின் மகள். சைவத்தை உயிர் மூச்சாகக் கொண்டவர். நாளும் சிவத்தொண்டு புரிவதில் தம்மை ஆட்படுத்தியவர். சைவம் தழைக்கவும், சமணம் புறம் போகவும்

பாடுபட்டவர். குறிப்பாக சம்பந்தரின் அவதார நோக்கத்திற்கு உறுதுணையாக நின்றவர். தனது கணவன் மனம் வருந்தாவண்ணம் திருநீற்றை நெற்றியிலின்றி, மார்பில் தரித்தவர். கணவன் மனம் நோகாவண்ணமும், அவனது ஆட்சிக்கு இடையூறு வராமலும், சமணர்களால் எத்தகைய தீங்கும் ஏற்படாமலும் மிகச் சாதுரியமாக மன்னனையும், மக்களையும் சைவத்தைப் பின்பற்றச் செய்து, சமணத்தை மதுரை ஆட்சி பீடத்திலிருந்து அகற்றியவர். சம்பந்தரிடத்து பேரன்பும் பெருமதிப்பும் கொண்டவர்.

குலச்சிறையார் பாண்டியனின் அரசத் தலைமை அதிகாரி அல்லது முதலமைச்சராவார். சைவ சமயத்தை உயிராகக் கொண்டவர். அடியார் வழிபாட்டைச் செய்தவர். சம்பந்தர் ஒரு பதிகம் முழுவதும் மங்கையர்க் கரசியாரையும், குலச்சிறையாரையும் பாடியுள்ளார். வேறு எந்த அடியார்க்கும் இவ்வாறு தனி ஒரு பதிகம் பாடப்பெறவில்லை. காரணம் இவர்கள் இருவரும் நலிந்த சைவத்தை, தூக்கி நிலைநிறுத்தியவர்கள். சைவம் தழைக்கப் பாடுபட்டவர்கள். குலச்சிறையாரது அடியார் வழிபாட்டை, 3:120: ஆம் பதிகத்தில் 1,2,3,4,5,6 ஆகிய பாடல்களில் குறிப்பிடுகிறார். "அடியார் அடிமிசை வீழும்", "கணங்களாய் வரினும், தமியராய் வரினும் அடியவர் தங்களைக் கண்டால் குணங்கொடு பணியும்", "நலம் இலர் ஆக நலமதுண்டாக நாடவர் நாடறிகின்ற குலம் இலர் ஆகக் குலமதுண்டாகத் தவம் பணி குலச்சிறை", "கோவணம் பூதி சாதனம் கண்டால் தொழு தெழு குலச்சிறை", "தொண்டராயுள்ளார் திசை தோறும் தொழுது" என்கிறார் சம்பந்தர். இயல்பிலேயே குலச்சிறையார் சைவத்தின் உரம் மிக்கவர்.

**மதுரை நிகழ்வுகள்**

அரசியார் ஆணைப்படி குலச்சிறையார் சம்பந்தருக்கு தூதனுப்பி ஆலவாய்க்கு அழைத்துவந்தார். தகுந்ததோர் மடத்தில் சம்பந்தரும் அடியாரும் தங்கவைக்கப்பட்டனர். தமது மதத்தில் ஆளுமையின்மையால் சமணர்களுக்கு சைவரைக் கண்டால் ஓர் அச்சம். தம் மதத்தை அழிக்கவே சம்பந்தர் வருகைபுரிந்ததாக அவர்கள் கருதினர். சம்பந்தரையும் அடியாரையும் கண்டபோதே, மன்னனிடத்து வந்து "கண்டு முட்டு" என, கேட்ட மன்னனும் "கேட்டு முட்டு" என்றனன். சைவர்கள் தமக்குத் தீங்கு விளைவிப்பார்கள் ஆதலால், அவர்கள் இருக்கும் மடத்திற்கு தீக்கொளுவுவோம் என்ற சமணர்கள் கருத்தை மன்னன் மறுக்கவில்லை. ஆட்சியில் உள்ள மன்னன் தன் நாட்டவர்க்கும், நாட்டிற்கு வந்தாருக்கும் பாதுகாப்பானவன். மதம், மன்னன் கண்ணை மறைத்தது. சமணக் குருமார் ஆட்டிவைத்தனர். பின் தீ வைத்தனர்.

சம்பந்தர் தமது அடியார்க்கு நலிவு செய்ததை உணர்ந்து சினந்தார். மன்னன்மேல் சினம் திரும்பியது. ஆயினும் பாண்டிமா தேவிமீது பரிவுகொண்டு, தீயை வெப்பாக மாறச்செய்து பையவே சென்று பாண்டியனைப் பற்ற ஆணையிட்டார். ஆலவாய் அண்ணலருளால் வெப்பு பற்றியது. பாண்டியன் துன்புற்றான். அமணர்களின் மந்திர, தந்திரங்கட்கு வெப்பு நீங்கவில்லை. இறுதியில் மன்னன் எதை, யாரைக் "கேட்டு முட்டு" என்றானோ, அதே சைவராம் சமபந்தரால், அதே திருநீறு மருந்துகொண்டு வெப்பு நோய் நீக்கப்பட்டது. சமணத்தின் முதல் தோல்வி, சைவத்தின் பெரு வெற்றி. அனல், புனல் வாதங்களிலும் சமணம் தோற்க, சைவம் தனது உண்மையை, உறுதியை, அன்பு நெறியை வெளிப்படுத்தி வெற்றிபெற்றது.

சைவத்தின் மேன்மையை, தொண்டு நெறியை, பகைவரையும் ஆட்படுத்தும் அன்பு நெறியை ஏற்று மன்னன் நீறணிய, மதுரை மக்களும் நீறணிந்தனர். சைவம் மீண்டும் எழுச்சி பெற்றது. சம்பந்தரின் அவதார நோக்கு நிறைவேறியது. சமண் கழுக்கையர் தங்களது சபதப்படி கழுவேறினர். அரசன் ஏற்றுவித்தான். ஒரு மதம் தனது கொள்கையால், செயலால் நன்மை விளைத்து, சமுதாயம் தழைக்க வழிகோலவேண்டுமேயொழிய சமுதாயத்தை அடிப்படுத்தி மக்கள் உணர்வை நசுக்குதல் கூடாது. சைவம் தனது எளிவந்த வழிபாட்டு முறைகளாலும், தமது அடியார்களின் தொண்டுகள் வாயிலாகவும், யாவரும் எந்நிலையிலும் பின்பற்றத்தக்கதாகவும் விளங்கியதால் உயர்ந்தது. அன்பின் வழியது உயிர்நிலை, "அன்புடையார் எல்லாம் உடையார்" என்பதை உணர்த்தி, மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படச் செய்தது. தொண்டையும், அன்பையும் போற்றுவதால் சமுதாயத்தில் தீமைகள் குறைந்தன.

**முருக நாயனார்**

அடியார்களின் சரியைத் தொண்டிலே ஒன்று இறைவரது பூசைக்கு மலர் வழங்குவது. முருக நாயனார் கோட்டுப்பூ, கொடிப்பூ, நிலப்பூ, நீர்ப்பூ என நான்கு வகை மலர்களைக் கொண்டு இண்டை, கண்ணி, தார், மாலை எனப் புனைந்து திருப்பள்ளித்தாமமாகவும், அர்ச்சனைக்கு உரிய மலர்களாகவும் முப்போதும் அளித்துவந்தார். "புண்ணியம் செய்வார்க்கு பூவுண்டு நீருண்டு","" சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்" என்பது எண்ணுதற்குரியது. சம்பந்தர், முருக நாயனார் கொடுத்த பூவினை அணிந்து கண்குளிர அழகாய் ஈசன் வீற்றிருந்தான் என்கிறார். "முருகன் செய்கோலம் கண்டு கண்டு கண்குளிரக் களிபரந்து ஒளிமல்கும்" ( 2:92:3 ) எனவும், "மூசுவண்டறை கொன்றை

முருகன் முப்போதுஞ் செய் முடிமேல் வாசமாமலர் உடையார் வர்த்தமானீச்சரத்தாரே" (2:92:5) எனவும் சுட்டப்படுகிறது.

மிக எளிய முறையில் பூக்கொடுத்துக்கூட இறைவழிபாடு செய்யலாம். பூக்களை உற்பத்தி செய்வதும் ஒரு தொண்டு. கொல்லாமை, புலால் உண்ணாமை, பாயுடுக்கை, தலைபறித்தல் என்னும் எந்த கடுமையான கட்டுப்பாடுகளும் இல்லாமல் மலர் கொண்டு வழிபடும் எளிய முறை மக்கட்கு உணர்த்தப்படுகிறது. எளிய இவ்வழிபாடே முக்திப்பேறு நல்குவதாகும்.

**திருநீலகண்ட யாழ்ப்பாணர்**

சம்பந்தருடன் உடன் சென்று உறுதுணையாக இருந்து தொண்டு செய்த அடியார்களுள் முதன்மையானவர் திருநீலகண்ட யாழ்ப்பாணர். சம்பந்தரது பாடல்களை இவர் யாழில் இசைத்துப்பாட, இவரது மனைவி மதங்க சூளாமணியார் மிடற்றிசையில் பாடி நாளும் இன்னிசையால் தமிழ் பாடி சம்பந்தர் சைவம் பரப்புதற்கு பெரிதும் உறுதுணையாக இருந்தனர். இவர்களது இசை ஆண்டுறையும் மக்களையும் ஈர்த்தது. சமய வளர்ச்சிக்கு இவர்களும் உறுதுணையாயினர்.

சம்பந்தர் யாழ்ப்பாணர் வாயிலாக சமுதாய சமத்துவத்தைக் காட்டுகிறார். சாதியப் பாகுபாடு சமூகத்தில் இருந்தாலும் இறையடியார் என்றபோது சாதி இல்லை. உயர்வு தாழ்வு இல்லை, ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு இல்லை, அன்பு ஒன்றுதான் அங்கு மூலதனம் என்பதனை நிரூபித்துக் காட்டினார்.

ஆலவாய்க் கோயிலின் வெளியே நின்று யாழ் வாசித்த பாணரை கோயிலினுள் அழைத்துவரவும் யாழ் சீதந்தாக்காது பலகையிட ஆலவாயண்ணல் ஆணை பிறப்பித்தான். அந்தணர் பெருமக்களும் பாணரை அழைத்து வந்தனர். கோயிலினுள்ளே வர மற்றையோர்க்குச் சமுதாய விதி தடையாயினும், அடியார்க்கு அத்தகைய தடை எதுவும் இல்லை. இறைவன் முன்னால் அடியார்கள் போற்றப்படுவர், மதிக்கப்படுவர். இறை நெறி உலகியலைக் கடந்த நெறி. மக்களாய்ப் பிறந்தார் இறைத் தொண்டும் சமயத் தொண்டும் செய்தால் யாவரும் உயர் நிலை பெற முடியும் என்பதைச் சம்பந்தர் குறிப்பிடுகின்றார். இறைவனைப் பாடுவதும், பரவுவதும் கிரியைத் தொண்டு என்பதும் வலியுறுத்தப்படுகின்றது.

(தொடரும்)

## ஸ்ரீ காசிமடம் செய்திகள்

### திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் அதிபர் 'கயிலைமாமுனிவர்' ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் எழுந்தருளி வழிபாடாற்றிய நிகழ்வுகள்

08.08.17 செவ்வாய் வைத்தீஸ்வரன் கோயில் தரிசனம்.

10.08.17 வியாழன் ஆலங்குடி ஸ்ரீ குருபகவான் தரிசனம் கோயில்வெண்ணியில் ருத்ராபிஷேக தரிசனம்.

11.08.17- வெள்ளி காலை கதிராமங்கலம், கஞ்சனூர் ; மாலை திருவலஞ்சுழி, சுவாமிமலை தரிசனம், திருமடத்தில் கணபதி ஹோமம்.

12.08.17 சனி திருஇடைச்சுரம், திருச்சூலம், மேடவாக்கம், திருப்பேரூர் ஆகிய தலங்களைத் தரிசித்து, வாரணாசி ஸ்ரீ கேதாரீஸ்வரர் ஆலய மண்டலாபிஷேக பூர்த்திக்கு எழுந்தருளல்.

25.08.17 வெள்ளி கங்கைகொண்ட சோழபுரம் திருக்கோயில் தரிசனம்.

26.08.17 ; 02.09.17 சனி திருப்பனந்தாள் திருக்கோயில் தரிசனம்.

01.09.17 வெள்ளி திருவலஞ்சுழி, சுவாமிமலை திருக்கோயில் தரிசனம்.

02.09.17 சனி திருலோக்கி ஸ்ரீ பாலுகந்தநாத சுவாமி திருக்கோயில் தரிசனம்.

06.09.17 புதன் திருநாரையூர் திருக்கோயில் தரிசனம்.

### ஸ்ரீ காசிமடம் ஸ்ரீமத் இளவரசு சுவாமிகள் வழிபாடாற்றிய நிகழ்வுகள்

12.08.17, 14.08.17 ஆகிய தேதிகளில் திருப்பனந்தாள் திருக்கோயில் தரிசனம். 14.08.17 ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் ஜென்ம நட்சத்திரம் ஸ்ரீஅருணஜடேஸ்வர சுவாமிக்கு ருத்ராபிஷேகம்.

20.08.17 ஞாயிறு அரியலூர் இராம்கோ சிமெண்ட் வளாகம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய விநாயகர் சதுர்த்தி விழா வழிபாடு, வாழ்த்துரை.

26.08.17 மயிலாடுதுறை காவிரி வடகரை ஸ்ரீ கேதாரீஸ்வரர் ஆலய யாகசாலை தரிசனம், செந்துரை நெய்வனம் திருக்கோயில் 5 ஆம் கால யாகசாலை தரிசனம்.

27.08.17 திருநாரையூர் திருக்கோயில் தரிசனம். கீழ்நத்தம் ஸ்ரீ சோமசுந்தரேஸ்வரர் கோயில், திருப்பனந்தாள் ஸ்ரீ செஞ்சடைக் காளியம்மன் திருக்கோயில் கும்பாபிஷேக தரிசனம், மாலை திருவாரூர் அடியக்க மங்கலம் ஸ்ரீ முத்து மாரியம்மன் திருக்கோயில் தரிசனம். திருவாரூர் கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசர் தரிசனம்.

03.09.17 மயிலாப்பூர், திருவலிதாயம், வடதிருமுல்லை வாயில் திருக்கோயில்கள் தரிசனம்.

**வாரணாசி திருக்கோயில் மண்டலாபிஷேக பூர்த்தி**

வாரணாசி ஸ்ரீ குமாரசுவாமி மடத்துக்கு உரிமையுள்ள ஸ்ரீ கௌரி அம்மை உடனாய ஸ்ரீ கேதாரீஸ்வரர் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி விழா 14.08.17 அன்று ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் திருமுன்னிலையில் இரண்டு கால ஹோமபூஜைகளுடன் நண்பகல் சிறப்பு அபிஷேகம் தீபாராதனையுடன் மிகச் சிறப்புடன் நடைபெற்றது. முன்னதாக 13.08.2017 பூர்வாங்க பூஜைகள் முதற்கால யாக சாலை தீபாராதனை நடைபெற்றது.

மண்டலாபிஷேகப் பூர்த்தி நினைவாக ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் திருவெண்காடு குரு குருக்களுக்கு (தி.சு. தெட்சிணாமூர்த்தி சிவாசாரியாருக்கு) ‘திருப்பணி சிவாகமச் செம்மல்’ என்ற சிறப்பு விருதினை வழங்கி கௌரவித்தார்கள். வாரணாசி ஸ்ரீ கேதாரீஸ்வரருக்கு ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள், செய்வித்த மூன்று கும்பாபிஷேகங்களிலும் (29.02.1988 ; 22.05.2004; 30.06.2017) சர்வ சாதகராக இருந்து சிறப்புடன் செய்ததைப் பாராட்டும் வகையிலும், இவ்வாலயத்தின் திருப்பணிகளில் அன்பர்களை ஆற்றுப்படுத்தி செய்த வகையிலும், புதிதாக பிரதோஷ புறப்பாட்டிற்காக மரத்தால் ரிஷப வாகனம், தேர் செய்வித்த வகையிலும், தாமே முன்னின்று இவ்வாலயத்தின திருப்பணிகள் கும்பாபிஷேக மண்டலாபிஷேக நிகழ்வுகள் முதலியவற்றினை முழு ஈடுபாட்டுடன் செய்த வகையிலும் திருவெண்காடு குரு குருக்களுக்கு சாதரா போர்த்தி பொற் பதக்கத்துடன் விருதினையும் பாராட்டிதழையும் வழங்கி கௌரவித்தார்கள்.

## ஸ்ரீ வீரியம்மன் திருக்கோயில் ஆடித்திருவிழா

ஸ்ரீ காசிமடத்திற்குச் சொந்தமான ஸ்ரீ வீரியம்மன் திருக்கோயிலில் ஆடி கடைவெள்ளியை முன்னிட்டு ஸ்ரீ வீரியம்மனுக்கு 11.08.17, 12.08.17, 13.08.17 ஆகிய தேதிகளில் சிறப்பு அபிஷேக அலங்காரம் நடைபெற்றது. 05.09.2017 செவ்வாய்க்கிழமை பௌர்ணமியை முன்னிட்டு திருவிளக்கு பூஜை நடைபெற்றது. விழாக்களில் எஜமான் சுவாமிகளும், இளவரசு சுவாமிகளும் எழுந்தருளி சிறப்பு வழிபாடாற்றினார்கள்.

## ஸ்ரீ மகா மாரியம்மன் திருக்கோயில் தீமிதி திருவிழா

15.08.17 செவ்வாய் திருப்பனந்தாள் ஸ்ரீ மாரியம்மன் திருக் கோயில் தீமிதி திருவிழா, சிறப்பு அபிஷேக ஆராதனையுடன் நடைபெற்றது. இரவு திருவீதியுலாவும் ஸ்ரீ காசிமடம் சார்பில் அன்னம்பாலிப்பு நடைபெற்றது. இதில் ஸ்ரீமத் இளவரசு சுவாமிகள் கலந்துகொண்டு வழிபாடாற்றினார்கள்.

## ஸ்ரீ பிடாரி அம்மன் திருவீதியுலா

18.08.17 வெள்ளியன்று நாகை மாவட்டம், குத்தாலம் வட்டம், கீழ அய்யனார்குடி கிராமத்தில் ஸ்ரீ காசிமடத்திற்குச் சொந்தமான ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ அய்யனார், ஸ்ரீ பிடாரியம்மன் ஆலயங்களில் ஸ்ரீ காசிமடத்தின் சார்பில் சிறப்பு அபிஷேக ஆராதனையும், இரவு அம்மன் திருவீதியுலாவும் நடைபெற்றது.

## பிரமனுக்கு சாபம் நீங்கியது

21.08.201 திங்கட்கிழமை பொய்கைக் குளத்தில் பிரமனுக்குச் சாபம் நீங்கிய ஐதீகவிழா ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் திருமுன்னலையில் நடைபெற்றது.

## ஸ்ரீ காசிமடத்தில் விநாயகர் சதுர்த்தி விழா

25.08.17 வெள்ளி ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி அன்று ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் வெள்ளை விநாயகருக்கு

கணபதி ஹோமம் செய்தும், மாலையில், பூஜைமட விநாயகருக்கு மோதகத்துடன் அர்ச்சனை செய்தும், கல்லூரி, திருவீதிகளில் எழுந்தருளி உள்ள விநாயகர்களுக்கு சிறப்பு வழிபாடாற்றியும், அன்பர்களுக்கு மோதகம் வழங்கியருளினார்கள்.

## ஸ்ரீ செஞ்சடை காளியம்மன் ஆலய கும்பாபிஷேகம்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துக்குச் சொந்தமான ஸ்ரீ செஞ்சடை காளியம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் 27.08.17 ஞாயிற்றுக்கிழமை இரண்டாம் கால யாகசாலை நிறைவுற்று, முற்பகல் 11.00-12.00 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் முன்னிலையில் நடைபெற்றது. ஸ்ரீமத் இளவரசு சுவாமிகளும் கலந்து கொண்டார்கள். முன்னதாக 26.08.17 முதல் கால யாகசாலை நடைபெற்றது. விழா நிறைவில் எஜமான் சுவாமிகள் பக்தர்களுக்குத் திருவருட்பிரசாதம் வழங்கியருளினார்கள்.

## நிறுவனர்தின விழா

ஸ்ரீ காசிமடத்தின் கல்வி நிறுவனங்களில் ஒன்றான ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கல்லூரியில் நிறுவனர் தின விழா ஸ்ரீ காசிமடத்தின் 20 ஆவது அதிபர், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகளின் ஜென்ம நட்சத்திரமாகிய ஆவணி மூலத் திருநாள் (31.08.17) அன்று கொண்டாடப் பட்டது. விழாவில் சங்கர் மேல்நிலைப்பள்ளி தமிழாசிரியர் கு. கணபதி சுப்பிரமணியன் சிறப்புரை ஆற்றி, மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்.

## ஸ்ரீ காசிமடம் ஸ்ரீ காசி விஸ்வநாதர் சத்ய சம்ரோட்சணம்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீவிசாலாட்சி சமேத ஸ்ரீ காசி விஸ்வநாத சுவாமி சன்னதியில் பழுதடைந்த சிமெண்ட் கோபுர கலசங்களை மாற்றி புதிதாக செப்புக் கலசங்கள் பொருத்தப்பட்டு கோபுர கலசங்களுக்கு சத்ய சம்ரோட்சன விழா இரண்டு கால யாகசாலையுடன் 31.08.17 வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு மேல் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது.

## ஆவணி மூலத் திருநாள்

31.08.17 வியாழன் பனசையில் ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் பூஜைமடத்தில் பத்து நாட்களும் சிறப்பு அபிஷேக ஆராதனைகளை பிட்டமுது நிவேதனத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் செய்தார்கள்.

மதுரையிலும், ஆவுடையார்கோயிலிலும் ஸ்ரீ காசிமடத்தின் சார்பில் சிறப்பு அபிஷேகங்கள் பிட்டமுது நிவேதனத்துடன் நடைபெற்றது.

திருச்சிராப்பள்ளியில் திருமுறைப்பாராயணம், திருமுறைக் கலாநிதிகள் திருச்சிராப்பள்ளி சோ. முத்துக்கந்தசாமி தேசிகர், திண்டுக்கல் எஸ். திருநாவுக்கரசு தேசிகர், திருச்சிராப்பள்ளி வே. பாலசுப்பிரமணியன், தேவார இசைமணிகள் மதுரை ஏ. சோமசுந்தர தேசிகர், மாகறல் தி. ஆடலரசன், சிதம்பரம் தி. செல்வமுத்துக் குமாரசுவாமி, திருவாரூர் எஸ். சந்திரசேகரன் ஆகியோர், ஹார்மோனியம் வடக்குத் திட்டை வி. கிருஷ்ணன், மிருதங்கம் ஆர். மாரியப்பன் ஆகிய பக்கவாத்தியங்களுடன் திருமுறை இன்னிசை நடைபெற்றது.

## ஸ்ரீ மஹா காளியம்மன் ஆலய கும்பாபிஷேக விழா

தத்துவாஞ்சேரி கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பால விநாயகர், ஸ்ரீ பால சுப்பிரமணியர், ஸ்ரீ பாப்பாத்தி அம்மன், ஸ்ரீ கன்னி அம்மன், ஸ்ரீ வீரனார் ஆகிய பரிவார மூர்த்தங்களுடன் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ மஹா காளியம்மன் ஆலய அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா 02.09.17 சனி முதல் கால யாகசாலை தொடங்கி, 03.09.17 ஞாயிறு இரண்டாம் கால யாகசாலையும்காலை 9.00 - 10.30 மணிக்குள் கும்பாபிஷேகமும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் முன்னிலையில் நடைபெற்றன. விழா நிறைவினில் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் வழிபாடாற்றி, அன்பர்களுக்கு பிரசாதம் வழங்கியருளினார்கள்.